Registered as Newspaper

# உதயன்

சுடர் : 36 கதிர் : 282 | செவ்வாய்க்கிழமை | ஆவணி 21 ஆம் நாள் 07 செப்ரெம்பர் 2021 | வள்ளுவர் ஆண்டு 2052
பக்கங்கள்: 16 விலை : ரூ.30
செய்தி : 021 493 0000 விளம்பரம்: 021 493 1111



# குடாநாட்டில் குறைகிறது கொரோனாத் தொற்று!

## எனினும் அபாயநிலை நீடிப்பு யாழ்.மாவட்டச் செயலர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், செப்ரெம்பர் 07
யாழ்ப்பாண மாவட்டத்தில் கொரோனா த்தொற்று நிலைமையானது அபாய நிலையிலேயே காணப்படுகின்றது. எனினும், கடந்த வாரத்தோடு ஒப்பிடுகையில் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை சற்றுக் குறைவடைந்துள்ளது என்று மாவட்டச்செயலர் க.மகேசன் தெரிவித்தார். 15 ➤

## மறவன்புலவு சச்சியிடம் பொலிஸார் விசாரணை

( விரிவு 2ஆம் பக்கம்)

## 122 ரூபாவுக்கு சீனியை தாராளமாகப் பெறலாம்

### மகேசன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், செப். 7
யாழ்.நகரக் கடைகளில் வெள்ளைச் சீனி 122 ரூபாவுக்கும் சிவப்புச் சீனி 125 ரூபாவுக்கும் விற்பனைசெய்யப்படுகின்றமை மாவட்டச் செயலக அதிகாரிகள் மூலமாக நேற்று உறுதிப்படுத்தப் பட்டுள்ளது. 15 ➤

## 3,173 தொற்றாளர்கள் நேற்று அடையாளம்

கொழும்பு, செப். 7
இலங்கையில் நேற்று 3 ஆயிரத்து 173 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர். 15 ➤

## கோத்தாபய சர்வாதிகாரியே நாட்டுக்கு அவரே தேவை!

### அமைச்சர் அருந்திக்க சபையில் ஒப்புதல்

கொழும்பு, செப். 7
ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச ஒரு சர்வாதிகாரி. அவரைப்போன்ற ஒரு சர்வாதிகாரி தேவை என்று, இராஜாங்க அமைச்சர் அருந்திக்க பெர்னாண்ன்டோ 15 ➤


## ஐரோப்பிய சர்வதேச மாநாட்டுக்கு பிரதமர் மஹிந்தவுக்கு அழைப்பு!

### ஐரோப்பிய சபாநாயகர், இத்தாலி பிரதமரை சந்தித்துப் பேசவும் ஏற்பாடு

கொழும்பு, செப். 7
ஐரோப்பாவில் நடைபெறவுள்ள உயர்மட்ட சர்வதேச மாநாட்டில் பங்கேற்று உரையாற்றுமாறு பிரதமர் மஹிந்த ராஜபக்சவுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. இது எமது நாட்டுக்கு கிடைத்த பெருமையாகும் 14 ➤

## அவசரகால நிலைக்கு சபையில் அங்கீகாரம்

### எதிர்க்கட்சிகள் கடும் எதிர்ப்பு



கொழும்பு, செப். 7
அவசரகாலச் சட்ட ஒழுங்கு விதிகள் தொடர்பான சட்டம், நாடாளுமன்றில் 81 மேலதிக வாக்குகளால் நேற்று நிறைவேறியது. 15 ➤

## மஹிந்தவின் சொல்லை கேட்கவேண்டும் கோத்தா

கொழும்பு, செப். 7
இராணுவத்தினரால் அனைத்து விடயங்களையும் திறன்பட செயற்படுத்த முடியாது. நாடு தற்போது எதிர்கொண்டுள்ள பிரச்சினைக்குத் தீர்வுகாண, ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச, பிரதமர் மஹிந்த ராஜபக்சவின் ஆலோசனையைப் பெற வேண்டும். சிறந்த ஆலோசனை கூறக்கூடியவர்களை உள்ளடக்கிய 15 ➤

## எந்தவொரு சட்டத்தையும் கையிலெடுக்கத் தயங்கோம்

### போருக்குப் பயன்படாத வாள் எதற்கு என்று வீரசேகர எகத்தாளம்

கொழும்பு, செப். 7
"மக்கள் நெருக்கடி நிலைமைகளை எதிர்கொள்ளும் நேரத்தில் அவசரகாலச் சட்டமல்ல, வேறு எந்தச் சட்டத்தையும் பயன்படுத்தத் தயங்கமாட்டோம். போருக்குப் பயன்படாத 14 ➤

## முல்லைத்தீவுப் பெண் தமிழகத்தில் கைது

சென்னை, செப். 7
தமிழகத்திலிருந்து தனுஷ்கோடி கடல் வழியாக சட்டவிரோதமாக இலங்கைக்கு தப்ப முயன்ற இலங்கையைச் சேர்ந்த இளம் பெண் ஒருவர் நேற்றுக்காலை கைது செய்ய 15 ➤

## ஏனைய கட்சிகளுடன் இணைந்து செயற்படத் தயார்

### ரணில் விக்கிரமசிங்க அறிவிப்பு

கொழும்பு, செப். 7
"இலங்கையை ஒரு சிறந்த நாடாக மாற்றுவதற்கு ஐக்கிய தேசியக் கட்சி, ஏனைய அரசியல் கட்சிகளுடன் இணைந்து செயற்படத் தயார்." என்று, ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான 15 ➤

## 213 பேருக்கு யாழில் கொரோனாத் தொற்று

யாழ்ப்பாணம், செப். 7
யாழ்ப்பாண மாவட்டத்தில் 213 பேர் நேற்றுக் கொரோனாத் தொற்றாளர்களாக இனம்காணப்பட்டுள்ளனர். 14 ➤

### கொரோனாக் கொத்தணிக்கு வழிவகுத்தாரென்று கூறி

## மக்களுக்கு 2,000/- வழங்கியவர் நெல்லியடியில் நேற்றுக் கைது




யாழ்ப்பாணம், செப். 7
கொரோனாத் தனிமைப்படுத்தல் விதிமுறைகளை மீறி அதிகளவானோரை [illegible] வழங்கிய 15 ➤

## மேலும் 180 பேர் சாவு மொத்தச் சாவு 10,320

கொழும்பு, செப். 7
இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் மேலும்180 பேர் சாவடைந்துள்ளனர் என்று அரச தகவல் 15 ➤

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நியூஸிலாந்து விசாரணைக்கு முழுமையாக ஒத்துழைப்பு!

## வெளிவிவகார அமைச்சு தெரிவிப்பு

கொழும்பு, செப். 7

“நியூஸிலாந்தில் மேற்கொள்ளப்பட்ட பயங்கரவாதத் தாக்குதல் தொடர்பில் அந்தநாட்டில் மேற்கொள்ளப்படும் விசாரணைகளுக்கு முழு ஒத்துழைப்பையும் வழங்குவதற்கு இலங்கை தீர்மானித்துள்ளது.”

இவ்வாறு வெளிவிவகார அமைச்சு நேற்று அறிவித்தது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தலைமையகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் இந்த விடயத்தை குறிப்பிட்டார்.

பயங்கரவாதம் என்பது ஆசிய நாடுகளுக்கு மட்டுமல்ல ஒட்டுமொத்த மனித குலத்துக்குமே அச்சுறுத்தலானது. சில தினங்களுக்கு முன்னர் நியூஸிலாந்தில் இடம்பெற்ற தாக்குதலும் இதனையே உணர்த்துகின்றது. எனவே, பயங்கரவாத அச்சுறுத்தலை தடுப்பதற்கான நடவடிக்கைகள் அவசியம்.

நியூஸிலாந்தில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவம் தொடர்பில் மேற்கொள்ளப்படும் விசாரணைகளுக்கு இலங்கையிலுள்ள அனைத்து புலனாய்வுப் பிரிவுகளும் முழு ஒத்துழைப்பையும் வழங்கும். ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவின் கட்டளையின் பிரகாரம் இதற்கான தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

புலிகள் அமைப்பு மீதான தடையை பிரிட்டன் நீடித்தமை வரவேற்கத்தக்க விடயம் என்பதுடன், இது ஏனைய நாடுகளுக்கும் முன்னுதாரணமாக அமையும்."

என்றும் அமைச்சர் பீரிஸ் குறிப்பிட்டார். (த-44)

# எரிவாயு சிலிண்டர் திருடியவர் கைது

யாழ்ப்பாணம், செப். 7

சமையல் எரிவாயு வெற்றுச்சிலிண்டர் திருடினார் என்ற குற்றச்சாட்டில் வல்வெட்டித்துறையில் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

வல்வெட்டித்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் தொடர்ச்சியாக எரிவாயு சிலிண்டர் திருடப்பட்டு வருவதனை அவதானித்த கடை நடத்துநர், அது தொடர்பில் பொலிஸாருக்கு முறையிட்டிருந்தார்.

இந்தநிலையில், கடை உடைத்து, சிலிண்டரை திருடமுற்பட்டபோது சந்தேக கைதுசெய்யப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது.

அவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில், 3 இடங்களில் திருடப்பட்ட 4 எரிவாயு சிலிண்டர்களும் மீட்கப்பட்டன.

உடுப்பிட்டியைச் சேர்ந்த 24 வயதுடைய ஒருவரே கைதுசெய்யப்பட்டுள்ளார். சிலிண்டர்களை திருடி விற்பனைசெய்து கிடைக்கும் அந்தப் பணத்துக்கு போதைப்பொருள்கள் வாங்குகின்றேன் என்று அவர் விசாரணையில் தெரிவித்துள்ளார். மேலதிக விசாரணையின் பின்னர் அவர் பருத்தித்துறை நீதிவானிடம் முற்படுத்தப்படுவார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (த-26)


# வவுனியா விபத்தில் ஒருவர் சாவு

வவுனியா, செப். 7

வவுனியா ஈரப்பெரியகுளம் பகுதியில் கடற்படை பேருந்தும் மோட்டார் சைக்கிளும் மோதி இடம்பெற்ற விபத்தில், இளைஞர் ஒருவர் உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில், மோட்டார் சைக்கிளில் பயணித்த அனுஸ்க அபயரத்ன லக்மால் (வயது - 28) என்பவரே உயிரிழந்தார். ஈரப்பெரியகுளம் பொலிஸார் விசாரணை மேற்கொண்டுள்ளனர். (த-110)

# மறவன்புலவு சச்சியிடம் நேற்று நினைவுத்தூபி பற்றி விசாரணை



யாழ்ப்பாணம், செப். 7

காணாமல் ஆக்கப்பட்டோர் நினைவாக யாழ்ப்பாணம் மறவன்புலவு பகுதியில் நினைவுத்தூபி ஒன்று அமைக்கப்பட்டு திறக்கப்பட்டுள்ளமை தொடர்பில் அதனை அமைத்த மறவன்புலவு சச்சிதானந்தத்திடம் பொலிஸ் உயர் அதிகாரிகள் விசாரணை நடத்தியுள்ளனர்.

கல்வெட்டுக்களுடன் நினைவுத் தூபி ஒன்று நிர்மாணிக்கப்பட்டு திறக்கப்பட்டுள்ள நிலையில் சம்பவ இடத்துக்கு வந்த பொலிஸார் தன்னை விசாரணைக்கு உட்படுத்தினர் என்றும் ஈழம் என்றால் என்ன? என்று அவர்கள் விசாரணை மேற்கொண்டனர் என்று அவர் தெரிவித்தார். (த-20)

# காணிப்பதிவகத்தின் சேவைகள் ஆரம்பம்

## யாழ்.மாவட்டச் செயலர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், செப். 7

யாழ். மாவட்ட காணிப்பதிவகத்தின் செயற்பாடுகள் நேற்றுத் திங்கட்கிழமை தொடக்கம் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று யாழ். மாவட்டச்செயலர் க.மகேசன் தெரிவித்தார்.

சேவையின் அவசர, அவசியத்தன்மை கருதி முற்பகல் 9 மணி தொடக்கம் மாலை 4 மணிவரை தொலைபேசி இலக்கமான 0212225681 என்ற இலக்கத்துடன் தொடர்புகொண்டு முற்பதிவை மேற்கொண்டு சேவையைப் பெற்றுக்கொள்ளலாம் என அவர் மேலும் தெரிவித்தார். (த-27)

# எரிபொருள் கலனுடன் வந்து சபை வாசலில் குந்திய பெண்

## கரவெட்டி தெற்குமேற்கு பிரதேச சபையில் சம்பவம்

யாழ்ப்பாணம், செப். 7

யாழ்ப்பாணம் வடமராட்சி கரவெட்டி தெற்கு,மேற்கு பிரதேச சபை வாசலில் எரிபொருளுடன் அமர்ந்து தமக்கு நீதி வேண்டும் என்று கோரிக்கை முன்வைத்து போராட்டத்தில் ஈடுபட்ட கணவனும் மனைவியும் நெல்லியடி பொலிஸாரால் பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச்செல்லப்பட்டனர்.

நெல்லியடி கரவெட்டியில் தாம் வசிக்கும் வீட்டுக்கு அருகாக வீடு ஒன்று பிரதேச சபையின் அனுமதி பெறாது அமைக்கப்பட்டுவருவதாகவும் குறித்த வீட்டால் பல்வேறு சிரமங்கள் தமக்கு ஏற்பட்டிருப்பதாகவும் குடும்பப்பெண் தெரிவித்துள்ளார்.

குறித்த வீட்டுக்கு அனுமதி பெறப்படவில்லை என்றும் அனுமதி பெற்ற பின்னரேயே கட்டடத்தை அமைக்குமாறும் பிரதேச சபையால் கடிதம் அனுப்பப்பட்ட நிலையிலும் கட்டடப் பணிகள் நடைபெறுகின்றன என்றும் நீதி கிடைக்க வேண்டும் என்றும் இல்லையேல் தாம் உயிரை மாய்க்கப் போவதாகவும் அவர் எச்சரிக்கை விடுத்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த விடயம் தொடர்பில் தவிசாளரை கேட்டபோது,

குறித்த பெண்ணின் குற்றச்சாட்டுக்கு உள்ளாகியுள்ள வீடு பிரதேச சபை அனுமதி பெறப்படாமல் கட்டப்படுவது உண்மைதான். அதேபோல குறித்த பெண் வீடும் பிரதேச சபையின் அனுமதி பெறப்படாமலேயே கட்டப்பட்டுள்ளது. இரண்டு வீடுகள் தொடர்பிலும் நீதிமன்றில் முறையிடப்பட்டுள்ளது. தற்போது நீதிமன்ற நடவடிக்கைகள் தடைப்பட்டுள்ளமையால் நிலைமை சீரானவுடன் குறித்த விவகாரங்கள் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என எதிர்பார்க்கின்றேன் என்று தெரிவித்தார்.

இதன் பின்னரே சம்பவ இடத்துக்குச் சென்ற நெல்லியடி பொலிஸார் விசாரணைக்காக போராட்டத்தில் ஈடுபட்ட இருவரையும் பொலிஸ் நிலையம் அழைத்துச் சென்றனர். (த-26)

# சங்கிலித் திருடன் மாட்டினான்

யாழ்ப்பாணம், செப். 7

அராலியில் சங்கிலி அறுத்தார் என்ற குற்றச்சாட்டில் ஒருவர் கைதுசெய்யப்பட்டார். மற்றையவர் சங்கிலியுடன் தலைமறைவானதால் அவர் தேடுதலில் உள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட அராலிப் பகுதியில் கடந்த 4 ஆம் திகதி சங்கிலி அறுத்த சம்பவம் தொடர்பில் பாதிக்கப்பட்டவர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தார். தாயும் மகளும் மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்தபோது, பிறிதொரு மோட்டார் சைக்கிளில் வந்த இருவரே அந்தப் பெண்களைத் தள்ளி வீழ்த்திவிட்டு பெண் ஒருவர் அணிந்திருந்த சங்கிலியை அறுத்துச் சென்றிருந்தனர். அதுபற்றி விசாரணை மேற்கொண்ட பொலிஸார், தெல்லிப்பழையைச் சேர்ந்த 20 வயதுடைய இளைஞன் ஒருவரை கைதுசெய்தனர்.

அவரிடம் மேற்கொண்ட விசாரணையில், தான் மோட்டார் சைக்கிள் திருத்தும் கடை ஒன்றில் வேலை செய்கின்றேன் என்றும் திருத்துவதற்காக விடப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளையே கொள்ளைக்குப் பயன்படுத்தினேன் என்றும் அராலியில் அறுத்த சங்கிலி மானிப்பாயைச் சேர்ந்த நபரிடம் உள்ளதாகவும் கூறியுள்ளார்.

தவிர, அந்த இருவரும் பல சங்கிலி அறுப்பு சம்பவங்களுடன் தொடர்புபட்டவர்கள் எனவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர். (த-27)

# அராலி மத்தியில் மீன்பிடி வலை திருட்டு

யாழ்ப்பாணம், செப். 7

அராலி மத்திப் பகுதியில், கடலில் மீன் பிடிப்பதற்காக விடப்பட்டிருந்த வலைகள் திருடப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

சுமார் 20 வலைகள் இவ்வாறு திருடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

திருட்டுத் தொடர்பில் வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. வட்டுக்கோட்டைப் பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். (த-27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சடலங்களை எரியூட்ட போக்குவரத்து வசதி

கிளிநொச்சி, செப். 7

கொரோனாத் தொற்றால் உயிரிழப்பவர்களின் உறவினர்களுக்கு உதவிகள் தேவைப்படின், சடலங்களை எரியூட்டுவதற்கான போக்குவரத்து வசதியை இலவசமாக வழங்க கிளிநொச்சி மாவட்ட நோயாளர் நலன்புரிச் சங்கம் முன்வந்துள்ளது. இது தொடர்பில் சங்கத்தின் தலைவர் க.முருகவேல் தெரிவிக்கையில்,

கிளிநொச்சி மாவட்ட நோயாளர் நலன்புரிச் சங்கம் உயிரிழப்புகள் ஏற்படும்போது, பணம் வழங்கக் கூடியவர்களிடம் பணத்தைப்பெற்று அமரர் ஊர்தியின் மூலம் சடலங்களை ஏற்றியுள்ளது. அதேவேளை வசதியற்றவர்களுக்கு இலவசமாக சடலங்களை ஏற்றி இறக்கும் பணியிலும் ஈடுபட்டுள்ளது. ஏனைய வசதிகள் சிலவற்றையும் மேற்கொண்டு வருகின்றது.

கிளிநொச்சி பொதுமருத்துவமனையில் மட்டுமல்ல மாவட்ட நோயாளர் நலன்புரிச் சங்கம் என்ற அடிப்படையில் ஏனைய மருத்துவமனைகளில் இருந்தும் சடலங்களை ஏற்றி இறக்கும் பணியில் ஈடுபட்டுள்ளது. தற்போதைய சூழலில் சடலங்களை ஏற்றி இறக்குவதில் மக்களுக்கு வசதியீனங்கள் காணப்படுமானால், கிளிநொச்சி மாவட்ட நோயாளர் நலன்புரிச் சங்கத்துடன் தொடர்பு கொள்ள முடியும். என்றார். (ம-4,13)

# தொற்றாளர்கள் அளவுக்கதிகமாக மருந்துகளை உட்கொள்ளக்கூடாது

## சுகாதாரப் பிரிவு கோரிக்கை



கொழும்பு, செப். 7

கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளாகின்றவர்கள், அளவுக்கு அதிகமாக நோயெதிர்ப்பு மருந்துகளைப் பயன்படுத்துவதனைத் தவிர்த்துக்கொள்ளுமாறு சுகாதாரப் பிரிவு கேட்டுக்கொண்டுள்ளது.

சமீபகாலமாக கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழப்பவர்களில் 30 வயதுக்குக் குறைவானவர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. மேலும், நேற்றுமுன்தினம் பதிவான கொரோனா மரணங்களில் 5 பேர், 30 வயதுக்குக் குறைவானவர்கள் என அரச தகவல் திணைக்களத்தின் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.


இதேவேளை, கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளானவர்கள் போதுமானளவு ஓய்வெடுக்க வேண்டியது அவசியம் என்று விசேட மருத்துவர் பிரியங்கர ஜயவர்தன வலியுறுத்தியுள்ளார். (த-இ)




# ஆனையிறவுப் பகுதியில் மரக்கன்றுகள் நடுகை

கிளிநொச்சி, செப். 7

பச்சிலைப்பள்ளிப் பிரதேச சபையால், கிளிநொச்சி ஆனையிறவுச் சூழலில் மரக்கன்றுகள் நடுகை செய்யப்படவுள்ளன. ஆனையிறவில் பெருமளவு நிலப்பரப்பு உவரடைந்து வருவதன் காரணமாக, மரங்கள் அழிவடைந்துள்ளன. எனவே உவர் நிலத்தில் செழித்து வளரக் கூடிய மரக்கன்றுகளை நடுகை செய்வதற்கான முயற்சிகளில் பிரதேசசபை ஈடுபட்டுள்ளது. அத்துடன் பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் மரங்கள் நடுகை செய்யவேண்டிய முக்கியமான இடங்களிலும் விரைவில் மரக்கன்றுகள் நடுகை செய்யப்படவுள்ளன. (ம-4,13)




வரலாற்றுச் சிறப்பு மிக்க நல்லூர் கந்தன் ஆலய தீர்த்தத் திருவிழா கொரோனாத் தடுப்பு சுகாதார நடைமுறைகளுக்கு அமைய நேற்று பக்திபூர்வமாக நடைபெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சடலங்களை எரியூட்டும்போது

# புகைபோக்கியூடாக துர்நாற்றமான புகை

பொதுமக்கள் அசௌகரியம்



**வவுனியா,செப். 7**

**வவுனியா பூந்தோட்டத்தில் அமைந்துள்ள நகரசபைக்குச் சொந்தமான மயானத்திலிருந்து, புகைபோக்கியூடாக துர்நாற்றமான புகை வெளிவருவதால், பொதுமக்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொண்டுள்ளனர்.**

இந்த மாயானத்தில் கொரோனாத் தொற்றுக்குள்ளாகி இறப்பவர்களின் சடலங்கள் எரியூட்டப்பட்டு வருகின்றன. அவற்றை எரியூட்டும் போது வெளிவரும் புகையால் அந்தப் பகுதியில் வசிக்கும் பொது மக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு உள்ளாகின்றனர்.

குறித்த மயானத்தில் எரிவாயு மூலம் சடலங்களை எரியூட்டுவதற்கான வசதிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. எனினும் சடலங்களை எரியூட்டும்போது அதன் புகை வெளியேறுவதற்காகப் பொருத்தப்பட்டுள்ள புகைபோக்கும் கோபுரம் உயரம் குறைவாகக் காணப்படுகின்றது.

அதனூடாக வெளிவரும் புகை அந்தப் பகுதியில் உள்ள குடியிருப்புப் பகுதிக்குப் பரவுகின்றது.

இதனால் குறித்த பகுதியில் துர்நாற்றம் வீசும் நிலையும் காணப்படுகின்றது. எனவே குறித்த புகைபோக்கும் கோபுரத்தின் உயரத்தை மேலும் அதிகரிக்க வேண்டும் என்று அந்தப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ம-4,110)



## இரு வாகனங்கள் விபத்து குடும்பஸ்தர் படுகாயம்

**முல்லைத்தீவு,செப்.7**

இரண்டு வாகனங்கள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளானதில், குடும்பஸ்தர் ஒருவர் படுகாயமடைந்தார்.

இந்த விபத்து புதுக்குடியிருப்பு ஒட்டுசுட்டான் வீதியில் மன்னாகண்டல் பகுதியில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றது.

புதுக்குடியிருப்பில் இருந்து மோட்டார் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்த குடும்பஸ்தர், ஒட்டுசுட்டானில் இருந்து வந்து கொண்டிருந்த முச்சக்கர வண்டியுடன் மோதி விபத்துக்குள்ளானார். விபத்தில் இரண்டு வாகனங்களும் கடும் சேதமடைந்தன. விபத்தில் காயமடைந்தவர் புதுக்குடியிருப்பு ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலைய வீதிப்போக்குவரத்துப் பொலிஸார் சம்பவ இடத்துக்கு விரைந்து விசாரணைகளை மேற்கொண்டனர். (ம-4,19)

## பாடசாலைகளை உடன் ஆரம்பிப்பது அவசியம்

மருத்துவர் பரிந்துரை

**கொழும்பு, செப். 7**

கொரோனாத் தொற்றுக்கு மத்தியில், பாடசாலைகளை மீண்டும் ஆரம்பிக்க வேண்டியது அவசியம். இனியும் தாமதிக்க வேண்டிய அவசியம் இல்லை என்று சிறி ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீட நோயெதிர்ப்புப் பிரிவுப் பேராசிரியர் நீலிகா மலவிகே தெரிவித்துள்ளார்.

பெரும்பாலான மேற்குலக நாடுகளில் கொரோனாத் தொற்றாளர்கள் அதிகரிக்கின்ற போதிலும், பாடசாலைகள் திறக்கப்பட்டன. எனினும், இலங்கை உள்ளிட்ட 23 நாடுகள் மாத்திரமே, மே மாதம் முதல் பாடசாலைகளை மூடியுள்ளன. எனவே அடுத்த வருடம் ஜனவரி மாதம் வரை பிள்ளைகளை வீட்டில் வைத்திருக்க பெற்றோர் ஒப்புக்கொள்வார்களா என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ம-4)

பொறுப்புக் கூறலிலிருந்து

## நல்லாட்சி அரசு தப்பவேமுடியாது

ஆளுங்கட்சியினர் தெரிவிப்பு


**கொழும்பு, செப். 7**

தேசிய ஒளடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையின் தரவு சேகரிப்பு முறைமை 2017ஆம் ஆண்டு டிஜிட்டல் மயப்படுத்தப்பட்டது. எனவே தற்போது அழிந்துள்ள தரவுகள் தொடர்பான பொறுப்புக் கூறலிலிருந்து நல்லாட்சி அரசும் எபிக் லங்கா தொழிநுட்ப நிறுவனமும் தப்புவதற்கு முயற்சிக்க முடியாது என்று ஆளுங்கட்சியின் பின்வரிசை உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

தேசிய ஒளடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையின் பல தரவுகள் அழிவடைந்துள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில், இந்தவிடயம் தொடர்பில் ஆளுங்கட்சியின் பின்வரிசை நாடாளுமன்ற உறுப்பினர்களான ஜயந்த வீரசிங்க, சஞ்சீவ எதிரிமான, வசந்தயாபா பண்டார மற்றும் கோகிலா குணவர்த்தன ஆகியோர் கண்காணிப்பொன்றை முன்னெடுத்திருந்தனர். இது தொடர்பில் தெளிவுபடுத்தும் வகையில் நேற்று முன்தினம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர்கள் இவ்வாறு தெரிவித்தனர். (த-இ)

## விலை நிர்ணயிக்கப்பட்டபோதும் சீனி, அரிசி சந்தையில் இல்லை

மொத்த வியாபாரிகள் தெரிவிப்பு





**கொழும்பு, செப். 7**

சீனிக்கான அதிகபட்ச சில்லறை விலை நிர்ணயிக்கப்பட்டுள்ள போதிலும் விற்பனை செய்வதற்கான சீனி சந்தையில் இல்லை என மொத்த விற்பனையாளர்கள் குற்றஞ்சாட்டுகின்றனர். சீனி இறக்குமதியாளர்களால் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் சீனி வழங்கப்படுவதனால் விற்பனை நடவடிக்கைகளில் பிரச்சினை ஏற்பட்டுள்ளதாக அவர்கள் தெரிவிக்கின்றனர். அத்துடன் போதுமானஅளவு அரிசியும் கிடைப்பதில்லை என மொத்த விற்பனையாளர்கள் குறிப்பிடுகின்றனர். (த-இ)

# நியூஸி. தாக்குதல் சம்பவத்துக்கு முஸ்லிம் அமைப்புகள் கண்டனம்!

**கொழும்பு, செப். 7**

நியூஸிலாந்து பயங்கரவாதத் தாக்குதல் சம்பவத்துக்கு காத்தான்குடி பள்ளிவாசல்கள் முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளனம் மற்றும் அகில இலங்கை ஜம்மியதுல் உலமாவின் காத்தான்குடிக் கிளை என்பன கண்டனம் வெளியிட்டுள்ளன.

இது தொடர்பாக அந்த அமைப்புக்கள் இணைந்து வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

நியூஸிலாந்தின் ஒக்லாண்ட் மாநிலத்தில் அமைந்துள்ள அங்காடியின் உள்ளே சர்வதேச பயங்கரவாத அமைப்பான ஐ.எஸ். ஐஎஸ் அமைப்பின் கொள்கைகளை ஆதரிக்கும் போக்குடைய இலங்கைப் பிரஜை ஒருவர் பொது மக்களைக் கத்தியால் குத்திக் காயப்படுத்திய கொடூரமான பயங்கரவாத சம்பவத்தை அறிந்து மிகுந்த அதிர்ச்சியும் கடுமையான மனவேதனையும் அடைகிறோம்.

வெறுக்கத்தக்க மிலேச்சத்தனமான இப்பயங்கரவாதச் செயலை காத்தான்குடி மக்கள் சார்பாகவும், இலங்கை முஸ்லிம் சமூகம் சார்பிலும் எமது சம்மேளனமும், அகில இலங்கை ஜம்மியதுல் உலமாவின் காத்தான்குடி கிளையும் இணைந்து வன்மையாகக் கண்டிக்கிறோம்.

இந்தச் சம்பவம் தொடர்பில் உத்தியோகபூர்வமாக அறிக்கை வெளியிட்ட நியூஸிலாந்து பிரதமர் ஜெசிந்தா ஆர்டென் கூறிய நேர்மையானதும், நடுநிலையானதுமான வார்த்தைகள் அர்த்தமிக்கவையும் மெச்சத்தக்கவையுமாகும். தாக்குதலைச் செய்தவர் ஒரு தனி நபர், அவர் செயலுக்கு அவர்மட்டுமே பொறுப்பாவார். தாக்குதல் சம்பவம் ஒரு மத நம்பிக்கையிலோ, குறிப்பிட்ட இனக்குழுவையோ, கலாசாத்தையோ சாராது என்று அவர் குறிப்பிட்டிருந்தார். எமது கருத்து நிலையும் அதுசார்ந்ததாகவே இருக்கிறது. நிச்சயமாக இந்தத் தாக்குதலானது மிகப்பிழையானது, அருவருப்பான செயலும் கூட. தாக்குதலால் பாதிக்கப்பட்டவர்கள், காயமடைந்தவர்கள் அவர்களது குடும்பங்களின் வலியை நாமும் உணர்கிறோம். மனிதம் சார்ந்த உறவு நிலையில் இன, மத, தேச வேறுபாடுகளைக் கடந்து அவர்களுக்கான எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவிக்கிறோம்- என்றுள்ளது. (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரச எதிர்ப்பு அலைகளை தடுக்க அவசரகாலச் சட்டம்

## பிரதான எதிர்க்கட்சி குற்றச்சாட்டு
## இராணுவ நியமனத்துக்கும் கடும் எதிர்ப்பு



கொழும்பு, செப். 7

**அரச எதிர்ப்பு அலையைத் தடுப்பதற்காகவே அவசரகாலச் சட்டம் முன்வைக்கப்பட்டுள் ளது. நாட்டில் திறமையான சிவில் அதிகாரிகள் இருக்கும் நிலையில், நிர்வாக சேவைக்கு எதற்காக தொடர்ச்சியாக இராணுவ நியமனங்கள் வழங்கப்படுகின்றன?**

இவ்வாறு பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி கேள்வி எழுப்பியுள்ளது.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற அவசரகால சட்ட ஒழுங்கு விதிகள் தொடர்பான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போது அந்தக் கட்சியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்துமபண்டார எம்.பி. இவ்வாறு கேள்வி எழுப்பினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

போர், கிளர்ச்சி மற்றும் கலவரங்களின்போதே நாட்டில் அவசரகாலச் சட்டம் பயன்படுத்தப்பட்டுள்ளது. ஆனால் வரலாற்றில் முதன்முறையாக பொருள்களின் விலையைக் கட்டுப்படுத்துவதற்காக அவசரகாலச் சட்டம் கொண்டுவரப்பட்டுள்ளது எனக் கூறப்படுகின்றது. நுகர்வோர் பாதுகாப்பு அதிகாரசபை தொடர்பான சட்டங்கள் இருக்கையில் எதற்காக அவசரகாலச் சட்டத்தை கொண்டுவர வேண்டும்? கொரோனாவைக் கட்டுப்படுத்துவதற்காகவோ அல்லது பொருள்களின் விலையைக் குறைப்பதற்காகவோ அல்ல, எதிர்ப்பு அலைகளை தடுப்பதற்காகவே அவசரகாலச் சட்டம் நீண்டநாள்களுக்கு பிறகு கொண்டுவரப்பட்டுள்ளது என்பதே உண்மையாகும்.

ஆணையாளராக இராணுவ அதிகாரிக்குநியமனம் வழங்கப்பட்டுள்ளது. நாம் இராணுவத்துக்கு எதிரானவர்கள் அல்லர். ஆனால், சிவில் நிர்வாகத்துக்கு இராணுவ அதிகாரிகள் நியமிக்கப்படுவதை எதிர்க்கின்றோம். திறமையான சிவில் அதிகாரிகள் இருக்கும் போது எதற்காக நிர்வாகத்துக்கு இராணுவ நியமனங்களை வழங்க வேண்டும்? இராணுவத்திலிருந்து ஓய்வுபெற்ற மேஜர் ஒருவர், அரச அதிபர்களுக்கு கட்டளையிடும் நிலைமை உருவாகியுள்ளது.

அரிசி விலை, சீனி விலை, பருப்பு விலை உட்பட பொருள்களின் விலையைக் கட்டுப்படுத்தமுடியா விட்டால் அரசு எதற்கு என அன்று விமல் வீரவன்ச எழுப்பிய கேள்வி தான் நினைவுக்கு வருகின்றது - என்றார். (எ-44)

## 10 நாடுகளுக்கான பயணத்தடை நீக்கம்

கொழும்பு, செப். 7

இலங்கை உட்பட 10 நாடுகளுக்கு பிலிப்பைன் ஸால் பிறப்பிக்கப்பட்டிருந்த பயணத்தடை நீக்கப் பட்டுள் ளது.

அதற்கமைவாக இலங்கை, இந்தியா, பங்களாதேஷ், பாகிஸ்தான், நேபாளம், ஐக்கிய அரபு இராச்சியம், தாய்லாந்து, ஓமான், மலேசியா மற்றும் இந்தோனேசியா ஆகிய நாடுகளுக்கான பயணத்தடையே நீக்கப்பட்டுள்ளது.

பயணத்தடை நீக்கப்பட்ட போதிலும் குறித்த நாடுகளில் இருந்து பிலிப்பைன்ஸுக்குச் செல்வோர் 14 நாள்கள் தனிமைப்படுத்தலில் இருக்க வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-4)



## பிரகாஸின் பூதவுடல் நேற்று மின் தகனம் செய்யப்பட்டது

யாழ்ப்பாணம், செப். 7

கொரோனோ தொற்றுக்கு உள்ளான நிலையில் உயிரிழந்திருந்த சுயாதீன ஊடகவியலாளர் பிரகாஸின் பூதவுடல் நேற்று மின்தகனம் செய்யப்பட்டது.

கொடிகாமத்தை சேர்ந்த ஞானப்பிரகாசம் பிரகாஸ் (வயது 26) கடந்த வாரம் கொரோனோ தொற்றுக்கு உள்ளான நிலையில் கடந்த 2ஆம் திகதி உயிரிழந்தார். சுகாதார விதிமுறைகளுக்கு அமைவாக அவரது பூதவுடல் கோம்பயன் மணல் மயானத்தில் நேற்று மின் தகனம் செய்யப்பட்டது. அத்துடன் அவரது அஸ்தி அல்லாரை புதிய செபமாலை அன்னை தேவாலய சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்பட்டது. (ம)

## தவிசாளர் நிரோஸுக்கு கொரோனாத் தொற்று!

யாழ்ப்பாணம், செப். 7

வலிகாமம் கிழக்கு பிரதேசசபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஸுக்குக் கொரோனாத் தொற்று உறுதிப் படுத்தப்பட்டது.

தவிசாளரின் உடல் நிலையில் மாற்றம் உணரப்பட்டதையடுத்து நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை கோப்பாய் பொதுச்சுகாதார மருத்துவ அதிகாரியைத் தொடர்பு கொண்டு அன்டிஜென் பரிசோதனை மேற்கொண்டபொழுது சோதனையில் அவர் கொரோனாத் தொற்றுக்கு உள்ளானமை கண்டறியப்பட்டது. (ம-26)

## பொ.ம.நிலையங்களை திறப்பதற்கு அனுமதி



கொழும்பு, செப். 7

நாட்டில் உள்ள அனைத்து விசேட பொருளாதார மத்திய நிலையங்கள் மற்றும் கொழும்பு மெனிங் சந்தை ஆகியவற்றை எதிர்வரும் 9 மற்றும் 10ஆம் திகதிகளில் திறக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அதற்கமைவாக மத்திய நிலையங்கள் மொத்த வர்த்தகத்துக்குத் திறக்கப்படும் என்று இராஜாங்க அமைச்சர் சசீந்திர ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

நாட்டில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள தனிமைப்படுத்தல் ஊரடங்கு உத்தரவு காரணமாக, அனைத்து பொருளாதார மத்திய நிலையங்களும் மூடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-4)

## கோத்தாபய அரசை வீழ்த்த சர்வதேச மட்டத்தில் சூழ்ச்சி



கொழும்பு, செப். 7

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தலைமையிலான அரசைப் பலவீனப்படுத்த தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் சூழ்ச்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன என்று சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான சாகர காரியவசம் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சர்வதேச மட்டத்திலான ஒரு சில ஊடகங்கள் இலங்கை தொடர்பில் பொய்யான செய்திகளை மாத்திரம் பதிவேற்றம் செய்துள்ளன. இலங்கையின் நெருக்கடியான நிலையைப் பயன்படுத்தி, அதனூடாக இலாபமடையும் நோக்கத்தை விளங்கிக்கொள்ள முடிகின்றது.

2019ஆம் ஆண்டு வீழ்ச்சியடைந்த பொருளாதாரத்தையே ஜனாதிபதி கோத்தாபய தலைமையிலான அரசு பொறுப்பேற்றது. கொரோனாத் தாக்கத்தால் பொருளாதாரம் மேலும் பாதிக்கப்பட்டது. சிறந்த திட்டமிடல்கள் ஊடாக அனைத்து சவால்களையும் அரசு சமாளித்து வருகின்றது. அரசைப் பலவீனப்படுத்தவும், நாட்டின் முன்னேற்றத்தைத் தடுக்கவும் ஒரு தரப்பினர் சூழ்ச்சி செய்து வருகின்றனர்.

அரசஅதிகாரிகளின் தவறான செயற்பாடுகளை அரசின் செயற்பாடு என்று கருத முடியாது. அரசஅதிகாரிகள் தவறான முறையில் செயற்பட்டால் அவர்களுக்கு எதிராக விசாரணை நடவடிக்கை முன்னெடுக்கப்படும். அரசு தொடர்பில் வெளியாகும் பொய்யான செய்திகள் குறித்து நாட்டு மக்கள் கவனம் செலுத்துவது பயனற்றது - என்றார். (ம-4)

## தடுப்பூசி வழங்கலில் இலங்கை முதலிடம்

கொழும்பு, செப். 7

கொரோனாத் தடுப்பூசி வழங்கும் நாடுகளின் பட்டியலில் இலங்கை கடந்த வாரம் முதலிடத்தில் உள்ளது.

உலகெங்கிலும் உள்ள தடுப்பூசித் திட்டத்தின் முன்னேற்றத்தை இணையத்தளம் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது. அதற்கமைவாக கடந்த வாரம் அதிக தடுப்பூசிகளை மக்களுக்கு செலுத்தியநாடாக இலங்கைஅடையாளப்படுத்தப்பட்டுள்ளது.

நாட்டின் மக்கள் தொகையில் 13 வீதமானோருக்கு கடந்த வாரம் முழுமையாகத் தடுப்பூசி போடப்பட்டுள்ளது என்று இணையத்தின் தலைவர் தனது உத்தியோகபூர்வ ருவிற்றரில் பதிவிட்டுள்ளார். அதேவேளை இந்தப் பட்டியலில் ஈகவடோர் இரண்டாவது இடத்திலும்,



புருனே மூன்றாவது இடத்திலும், நியூஸிலாந்து நான்காவது இடத்திலும், கியூபா ஐந்தாவது இடத்திலும் உள்ளன. (ம-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டில் உணவுப்பொருள்களுக்கு எந்தத் தட்டுப்பாடும் இல்லையாம்

## உணவு மாபியாக்களை கட்டுப்படுத்தவே அவசரகாலச் சட்டம் என்கிறது அரசு

**கொழும்பு, செப். 7**

**இலங்கையில் எந்தவொரு உணவுப்பொருளுக்கும் தட்டுப்பாடு ஏற்படவில்லை. உணவு மாபியாக்களை கட்டுப்படுத்துவதற்காகவே அவசரகாலச் சட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது. மாறாக இராணுவ ஆட்சியை முன்னெடுப்பதற்கு அல்ல.**



இவ்வாறு விவசாயத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற அவசரகாலச் சட்ட ஒழுங்கு விதிகள் தொடர்பான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மக்களைப் பாதுகாப்பதற்காக எந்தவொரு சந்தர்ப்பத்திலும் ஜனாதிபதியால் அவசரகாலச் சட்டத்தைப் பயன்படுத்தமுடியும். கடந்த ஆட்சியின்போது மீதொட்டமுல்ல குப்பைமேடு சரிந்த போதுகூட குறித்த சட்டம் பயன்படுத்தப்பட்டது. மக்கள் பாதுகாப்புச் சட்டத்தின் பிரகாரம் ஜனாதிபதியால் அவசரகாலச் சட்ட ஒழுங்கு விதிகள் அமுல்படுத்தப்பட்டுள்ள நிலையில், அது தொடர்பில் சர்வதேச ஊடகங்களில் வேறு கோணத்திலேயே செய்திகள் வெளியாகின.

இலங்கையில் உணவுத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது எனவும், அந்த நெருக்கடி நிலைமையை சமாளிப்பதற்காகவே அவசரகாலச் சட்டம் கொண்டுவரப்பட்டுள்ளது எனவும் தகவல் வெளியிடப்பட்டன. சதொசவில் மக்கள் வரிசையில் நிற்கும் காட்சிகளும் காண்பிக்கப்பட்டன. நாட்டில் எந்தவொரு உணவுக்கும் தட்டுப்பாடு இல்லை என்பதை விவசாய அமைச்சர் என்ற வகையில் பொறுப்புடன் கூறிக்கொள்கின்றேன்.

உணவு மாபியாக்களைக் கட்டுப்படுத்தவே ஜனாதிபதியால் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டது. நுகர்வோர் பாதுகாப்புச் சபையிலுள்ள சட்டங்கள்கூட உணவு மாபியாக்களால் தயாரிக்கப்பட்டுள்ளன. எனவேதான் சட்டத்திருத்தங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. இராணுவ ஆட்சியை ஏற்படுத்தவே அவசரகாலச் சட்டம் எனவும் விமர்சனம் முன்வைக்கப்படுகின்றது. கொரோனாவுக்கு மத்தியிலும் எதிரணிகளால் பல போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

அதனைக் கட்டுப்படுத்துவதற்கு ஜனாதிபதி ஒருபோதும் அவசரகாலச் சட்டத்தைப் பயன்படுத்தவில்லை. -என்று அவர் தெரிவித்தார். (எ-44)


# மதுபானசாலைகள் பூட்டு ரூ.16,000 கோடி நட்டம்

கொழும்பு, செப். 7

மதுபானசாலைகள் மூடப்பட்டுள்ளதால் அரசுக்கு 16 ஆயிரம் கோடி ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளது என்று மதுவரித் திணைக்களத்தின் ஆணையாளர் எம்.ஜே.குணசிறி தெரிவித்துள்ளார்.

தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்ட கடந்த மாதம் 20ஆம் திகதி முதல் எதிர்வரும் 13 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குள்ளேயே இந்த நட்டம் ஏற்பட்டுள்ளது.

அதேவேளை மதுபானசாலைகள் மூடப்பட்டுள்ளதால் நாளொன்றுக்கான நட்டம் 700 கோடி ரூபா என்று மதுவரித் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ம-4)



# மின்சாரம் தாக்கி யானை உயிரிழப்பு

கொழும்பு, செப். 7

மின்சாரம் தாக்கி உயிரிழந்த நிலையில், காட்டுயானையின் சடலம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

தனமல்வில பிரதேச செயலகப் பிரிவுக்கு உட்பட்ட கலவெல்கல பிரதேசத்தில் குறித்த சடலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

அனுமதியின்றி அமைக்கப்பட்டிருந்த மின்சாரவேலியில் சிக்கி குறித்த காட்டு யானை உயிரிழந்துள்ளது. உயிரிழந்த காட்டு யானை சுமார் 18 தொடக்கம் 20 வயது மதிக்கத்தக்கது என்று வனவிலங்கு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (ம-4)

# இலங்கையிலிருந்து ஐ.எஸ். ஊடுருவலாம்

## இந்தியா எச்சரிக்கை

கொழும்பு, செப். 7

இலங்கையிலிருந்து ஐ.எஸ் தீவிரவாதிகள் இந்தியக் கடலோரப் பகுதிக்குள் ஊடுருவ வாய்ப்புக்கள் உள்ளன என்று இந்தியா எச்சரிக்கை விடுத்துள்ளது.

கேரள மாநிலத்தைச் சேர்ந்த புலனாய்வுப் பிரிவு இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளது.

இதனையடுத்து கேரள மாநிலம் மற்றும் கடற்கரையோரப் பிரதேசங்களின் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளது.

அத்துடன் இலங்கையிலிருந்து கடல்வழியாக கர்நாடகாவின் அலபுல்லா மாவட்டத்தில் ஐ.எஸ் தீவிரவாத அமைப்புடன் தொடர்புடையவர்கள் பிரவேசிக்க வாய்ப்புள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அங்கும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. (ம-4)

# கல்முனையை சீரழிக்க முயல்கின்றார் கருணா

## அம்பாறை மாநகர சபை உறுப்பினர் குற்றச்சாட்டு

கொழும்பு, செப். 7

கல்முனையை சீரழிக்கவே கருணா அம்மான் முயல்கின்றார். பிரச்சினைகளின்போது பிள்ளையான் வாய்க்குள் கொழுக்கட்டையை வைத்திருக்கிறார் என்று தெரிவித்துள்ளார் கல்முனை மாநகரசபை உறுப்பினர் சந்திரசேகரம் ராஜன்.

கல்முனை காணிச்சர்ச்சை விடயம் தொடர்பில் அம்பாறை ஊடக அமையத்தில் நேற்று நடத்திய ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

யாரும் எங்கும் சட்ட ரீதியாகக் குடியமர முடியும். அதை யாரும் தடுக்க முடியாது. ஆனால் தமிழர்கள் செறிந்து வாழும் பிரதேசத்தில் இவ்வாறு ஒரு மத்ரஸா அமைப்பது ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்று.

அந்தக் காணிக்கு அண்மையில் மிக நீண்டகால வரலாற்றைக் கொண்ட கோயில் உள்ளது. தமிழர்களின் மரபுகள், கலாசாரம் இதன்மூலம் பாதிக்கப்பட வாய்ப்புள்ளது. முஸ்லிம்கள் செறிந்து வாழும் பிரதேசத்தின் நடுவில் இந்துக் கடவுள் சிலைகளை நிறுவினால் எப்படி இருக்கும்?. அதுபோலவே இந்தச் செயலும் உள்ளது.

இந்த விடயத்தில் மக்களை ஏமாற்றும் அரசியல்வாதிகள், கல்முனை மாமாங்க வித்தியாலயத்தை அண்டிய பிரதேசத்தில் எழுந்த காணி விவகாரத்தை போன்று இதையும் அணுகி யாருக்கும் பாதிப்பில்லாத நிரந்தரத் தீர்வை முன்வைக்க வேண்டும்.

இப்படியான முரண்பாடுகளைக் களைய எமது பிரதேசத்திலிருந்தே அரசியல் தலைமைகள் எதிர்காலத்தில் உருவாக வேண்டும். கடந்த மாகாணசபைக்கு அம்பாறையிலிருந்து மூன்று ராஜாக்களை அனுப்பினோம்.

முதலமைச்சராக சிவநேசதுரை சந்திரகாந்தன் இருந்தார். அவர்களால் அம்பாறைக்கு எதையும் செய்ய முடியாமலே போனது. இப்போது பிள்ளையான் நாடாளுமன்ற உறுப்பினராக உள்ளார்.

கல்முனைப் பிரதேச செயலகம் தொடர்பில் வாய் திறக்க முடியாது வாய்க்குள் கொழுக்கட்டை வைத்துள்ளார் போலும். சத்தமே வெளிவருவதாக தெரியவில்லை.

அவரை மீண்டும் கிழக்கு முதலமைச்சராகக் கொண்டுவர சிலர் கடும் எத்தனிப்புக்களை செய்துகொண்டு அம்பாறையில் கப்பலைத் தொடர்ந்து படகுக்கு ஆதரவு திரட்டுகிறனர்.

தமிழ் மக்களின் வாக்குகளைப் பெறுவோர் தமிழ் மக்களின் குரலாக எங்கும் ஒலிக்க வேண்டும். -என்றார். (எ-இ)



# சிங்களப் பாடகர் கொரோனாவால் உயிரிழப்பு

கொழும்பு, செப். 7

இலங்கையின் ஜிப்ஸி இசைக் குழுவின் தலைவரும், சிங்கள இசைக்கலைஞருமான சுனில் பெரேரா கொரோனாத் தொற்றால் உயிரிழந்துள்ளார்.

தனியார் மருத்துவமனையின் தீவிர சிகிச்சைப்பிரிவில் சேர்க்கப்பட்டிருந்த அவர், தனது 68 ஆவது வயதில் உயிரிழந்துள்ளார். நிமோனியாத் தொற்றுக் காரணமாக அவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தார்.

கடந்த மாதம் இவருக்கு கொரோனாத் தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டது. பின்னர் தொற்றிலிருந்து பூரண குணமடைந்து வீடு திரும்பியிருந்தார் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ம-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## பூச்சுற்றும் அரசியலும் நீதிக்கான குரலும்


2009ஆம் ஆண்டு, முள்ளிவாய்க்காலில் விடுதலைப் போராட்டம் மௌனிக்கப்பட்ட பின்னர் தமிழ் மக்கள் தமது உரிமைகளை வென்றெடுக்க, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை மட்டும் தமது ஒரேயொரு அரசியல் சக்தியாக நம்பினார்கள். ஆனால் அந்த நம்பிக்கைக்கு மாறாக தமிழ் மக்களின் அபிலாஷைகளை வென்றெடுப்பதற்கு பாடுபடவேண்டிய தமிழ்த் தேசியம் பேசும் கட்சிகளும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் கட்சி அரசியல், தேர்தல் அரசியலில் இறங்கிவிட்டன என்ற சந்தேகத்தை வலுப்படுத்துகின்றன அண்மைய சம்பவங்கள்.

போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட பின்னர், தமிழீழ விடுதலைப் புலிகளால் சுட்டிக்காட்டப்பட்டிருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு தமிழ் மக்கள் தங்களின் முழு ஆதரவையும் கொடுத்திருந்தனர். எனவே தமிழ்மக்களின் உரிமைகளைப் பாதுகாப்பதிலும், நீதியைப் பெற்றுக்கொடுப்பதிலும் ஏனைய தமிழ்த் தேசியம் பேசும் கட்சிகளை விடவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு அதிக பொறுப்பு உண்டு என்பதை மறுக்கமுடியாது. தமிழ் மக்கள் தங்கள் கைகளில் தந்துள்ள பெரும் பொறுப்பின் பெறுமதியை உணர்ந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு செயற்படுகின்றதா என்றால் இல்லை என்றே கூறவேண்டும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் உள்ள கட்சிகள், தங்கள் முன்னுள்ள ஓர் இனத்தின் எதிர்பார்ப்பைப் புறந்தள்ளி தங்களுக்குள் யார் பெரியவர் என்றும், யாருக்குப் பதவி என்றும் முட்டிமோதுகின்றன. கட்சிகளை வளர்க்கவும், அதிகாரங்களைக் கைப்பற்றவும் ஆலாய்ப் பறக்கின்றன. இவை மட்டுமல்லாது, தங்கள் அரசியல் ஆதாயத்துக்காக, தமிழ் மக்களை அடிமுட்டாள்கள் என்று நினைத்துக் காதில் பூச்சுற்றவும் முனைகின்றன.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் அமர்வு நடக்கவிருக்கும் நிலையில், அதன் ஆணையாளருக்கு கடிதம் ஒன்றை அனுப்புகின்றோம் என்று இங்குள்ள தமிழ்க்கட்சிகள் அனைத்தும் தடல்புடலாக ஏற்பாடுகள் செய்திருந்தன, செய்துகொண்டிருக்கின்றன. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒருபடி மேலேசென்று தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பும் போர்க்குற்றங்களில் ஈடுபட்டதாக கூறி கடிதங்களை தயாரித்துக் கொண்டிருக்கின்றது. ஆனால் இந்தக் கடிதங்களால் எந்தப் பயனும் இல்லை, கடிதங்களை அனுப்புவதற்கான காலஎல்லை முடிந்துவிட்டது என்பதுதான் உண்மை. அது தெரிந்தும் தமிழ்க் கட்சிகளின் கடிதம் அனுப்பும் செயற்பாடு, தமிழ் மக்களின் காதுகளில் பூச்சுற்றி, வாக்குகளைக் கையகப்படுத்தும் நடவடிக்கை என்றே நோக்கவேண்டும்.

தேர்தல் வாக்குகளுக்காகத் தங்களை நம்பும் மக்களை ஏமாற்றும், யதார்த்தம் என்று கூறித் தன் இன மக்கள் மீதே மண்ணை வாரிப்போடும் அரசியல்வாதிகளை விட, தன் இன மக்களுக்காகத் தன் தலையையேனும் அடகு வைக்கும் தலைவர்களே நமக்குத் தேவை. மக்களை முட்டாளாக்கி, அவர்களின் கண்ணீரில் தொடர்ந்து சவாரி செய்யலாம் என்று அரசியல்வாதிகள் நினைப்பார்களேயானால் அது ஒருபோதும் நடக்கப் போவதில்லை. அதைப் புரிந்து அரசியல்வாதிகள் இனியாவது மக்களின் நலன்சார்ந்து சிந்திக்க வேண்டும். சிந்திப்பார்களா?




# பயங்கரவாதத்தின் கொடூரத்தை இனங்காண்பது மிகஅவசியம்!

## நியூஸிலாந்து தாக்குதலுக்கு இலங்கை கடும் கண்டனம்



**கொழும்பு, செப். 7**

**பயங்கரவாதத்தின் கொடூரத்தன்மையை இனங்கண்டு, தாக்குதல்களைத் தடுப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படவேண்டியதன் முக்கியத்துவத்தை நியூஸிலாந்து தாக்குதல் சம்பவம் மீண்டும் உணர்த்தியுள்ளது என்று இலங்கை அரசு சுட்டிக்காட்டியுள்ளது.**

நாடாளுமன்றம் நேற்று முற்பகல் 10 மணிக்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் கூடியது. அதில் நியூஸிலாந்தில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவம் தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே சபை முதல்வரும், அமைச்சருமான தினேஷ் குணவர்தன மேற்கண்டவாறு தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கையில் பிறந்தவர் எனக் கூறப்படும் கொடூர மான பயங்கரவாதியால், நியூஸிலாந்தில் நடத்தப்பட்ட குரூரத் தாக்குதலை வன்மையாகக் கண்டிக்கின்றோம். நியூஸிலாந்து அரசு மற்றும் அந்த நாட்டு மக்களுடன் துயரைப் பகிர்ந்துகொள்கின்றோம்.

பயங்கரவாதத்தின் கொடூரத்தன்மையை அடையாளம் கண்டு, தாக்குதலைத் தடுக்க நடவடிக்கை எடுக்கவேண்டியதன் முக்கியத்துவம் சர்வதேசம் ஊடாக மீண்டும் உணர்த்தப்பட்டுள்ளது - என்றார். (எ-44)

# இஸ்லாம் தீவிரவாதத்தை ஒழிக்க கண்காணிப்பை அதிகப்படுத்துக!

## பொலிஸாருக்கு வீரசேகர அறிவுரை



கொழும்பு, செப். 7

விடுதலைப்புலிகள் அமைப்பை ஒழிப்பதில் பொலிஸார் பெரும் சேவையாற்றியது எங்களுக்குத் தெரியும். அதேபோன்று இஸ்லாமியப் பயங்கரவாதிகள் மீண்டும் தலைதூக்க முயல்வதைக் கண்காணிக்கும் நடவடிக்கைகளைப் பொலிஸார் தொடர்ந்தும் முன்னெடுக்க வேண்டும்

இவ்வாறு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

கொரோனாத் தடுப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுவதால், பொலிஸார் இஸ்லாமியப் பயங்கரவாதிகள் மீண்டும் தலைதூக்க முயல்வதை கண்காணிக்கும் நடவடிக்கைகளில் அக்கறையின்றி இருக்கக் கூடாது. உள்நாட்டுப் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக இஸ்லாமியப்பயங்கரவாதிகளின் எழுச்சியைக் கண்காணிக்கும் விடயத்தில் பொலிஸார் மேலதிக விழிப்புணர்வுடன் செயற்பட வேண்டும்.

உள்நாட்டுப் பாதுகாப்புக்கு பெரும் அச்சுறுத்தலாகக் காணப்பட்ட விடுதலைப்புலிகள் அமைப்பை ஒழிப்பதில் பொலிஸார் பெரும் சேவையை ஆற்றியது எமக்குத் தெரியும். ஆனால் தற்போது நிலைமை வேறு. நாங்கள் கண்ணுக்குத் தெரியாத எதிரியுடன் போராடுகின்றோம்.

ஐ.எஸ்.ஐ.எஸ் என்பது ஒரு கொள்கை. அந்தக் கொள்கையால் ஈர்க்கப்பட்ட ஒருவரை அடையாளம் காண்பது கடினமாகும். அவ்வாறான நபர்களிடம் பொதுவாகக் காணப்படும் அறிகுறிகள் என்னவென்றால் அவர்கள் ஏனையவர்களிடமிருந்து தங்களைத் தனிமைப்படுத்திக் கொண்டிருப்பார்கள். அதன் பின்னர் தீவிரவாதத்திலிருந்து பயங்கரவாதத்துக்கு மாறுவார்கள். அதை நாங்கள் எதிர்கொள்ள முடியும். ஆனால் பொலிஸார் மிகுந்த விழிப்புணர்வுடன் இருப்பது அவசியம் - என்றார். (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஈழத்தமிழர்கள் விடயத்தில் துடிப்புடன் உள்ளது தமிழகம்!

## கேணல் ஹரிகரன் தெரிவிப்பு



**கொழும்பு, செப்.7**

**இலங்கை அகதிகள் நல்வாழ்வுத்திட்டங்களின் அறிவிப்பு ஆளும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் அரசியல் நிகழ்ச்சி நிரலில் இலங்கைத் தமிழர் பிரச்சினை இன்னமும் துடிப்புடன் இருக்கிறது என்பதை எடுத்துக்காட்டுகிறது.**

இவ்வாறு இலங்கையில் இந்திய இராணுவம் செயலாற்றியபோது, இந்திய இராணுவப் புலனாய்வுத் தலைமை அதிகாரியாகச் செயற்பட்ட கேணல் ஆர்.ஹரிகரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

தமிழ்நாட்டில் 1983ஆம் ஆண்டிலிருந்து வாழ்ந்துவரும் மூன்று இலட்சத்துக்கும் அதிகமான இலங்கைத் தமிழ் அகதிகளுக்கான நல்வாழ்வுத் திட்டங்களை முதலமைச்சர் மு.க.ஸ்ராலின் அண்மையில் அறிவித்தார். அவர்களின் நல்வாழ்வுத் திட்டங்களைக் கையாளுவதற்கு குழுவொன்றை நியமிக்கவும் முதலமைச்சர் யோசனை முன்வைத்திருக்கிறார். ஈழப் போரின்போதான மனித உரிமை மீறல்கள் மற்றும் அதிகாரப்பரவலாக்கல் போன்ற சர்ச்சைக்குரிய பிரச்சினைகள் என்று வரும் போது தமிழ்நாடு அரசு புதுடில்லி மீது நெருக்குதலைக் கொடுக்கும் என்று நாம் எதிர்பார்க்கமுடியும்.

இலங்கைத் தமிழ் அகதிகளுக்கு இந்தியக் குடியுரிமை வழங்குவது தொடர்பான விவகாரத்தையும் முதலமைச்சர் ஸ்ராலின் மத்திய அரசின் கவனத்துக்குக் கொண்டுவரக்கூடியதும் சாத்தியமே.- என்றார். (எ-சி)

## கொழும்புத் துறைமுகத்திலும் சீனாவுக்கு நிலம் வழங்கிய அரசு

கொழும்பு, செப். 7

கொழும்பு போர்ட்சிற்றியை அடுத்து கொழும்புத் துறைமுகத்திலும் சீனாவுக்கு நிலம் வழங்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு துறைமுகத்திலுள்ள துறைமுக அதிகார சபைக்குச் சொந்தமான 13 ஏக்கர் பகுதியே சீன நிறுவனத்துக்குக் குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளது என்று கூறப்படுகின்றது.

வருடத்துக்கு வெறும் 8 லட்சம் ரூபா குத்தகைக்கு இந்தப் பகுதி வழங்கப்பட்டுள்ளது என்று அனைத்துத் துறைமுகப் பொது ஊழியர் சங்கத்தின் செயலாளர் நிரோஷன் கொரகானகே தெரிவித்தார். முறையான கேள்விப்பத்திரம் அறிவிக்கப்பட்டு இந்தச் செயற்பாடுகள் இடம்பெறவில்லை என்றும் அவர் குற்றஞ்சாட்டியுள்ளார். (எ-இ)

## ரிஷாத் பதியுதீன் நீதிமன்றில் ஆஜர்

கொழும்பு, செப். 7

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீன் கொழும்பு நீதவான் நீதிமன்றில் நேற்று முற்படுத்தப்பட்டார்.

அவரது வீட்டில் தீக்காயத்துக்கு உள்ளாகி மர்மமான முறையில் உயிரிழந்த சிறுமி தொடர்பான வழக்கு விசாரணைகளுக்காக நீதிமன்றில் அவர் முற்படுத்தப்பட்டார்.

சிறுமி உயிரிழந்தமை தொடர்பான வழக்கில் ரிஷாத் பதியுதீனின் மனைவி, மாமனார், மைத்துனர் மற்றும் சிறுமியைப் பணிக்கமர்த்திய தரகர் ஆகிய நால்வரும் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில், மற்றுமொரு வழக்கில் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டு, பின்னர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள ரிஷாத் பதியுதீன், இந்த வழக்கில் ஐந்தாவது சந்தேகநபராகப் பெயரிடப்பட்டுள்ளார். (4)

## கஞ்சா செடி வளர்த்தோர் சிக்கினர்

கொழும்பு, செப்.7

நுவரெலியா, கந்தப்பளை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பெத்துன்கம மாவத்தையில் கஞ்சா செடிகளை வளர்த்த 4 இளைஞர்களைக் கந்தப்பளை பொலிஸார் கைது செய்துள்ளனர். கெமுனு மாவத்தை பகுதியைச் சேர்ந்த இளைஞர்களே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர். கந்தப்பளைப் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலுக்கு அமைய இளைஞர்களின் வீட்டைச் சுற்றி வளைத்த பொலிஸார் அங்கு தேடுதலில் ஈடுப்பட்ட போது தண்ணீர்த் தாங்கி ஒன்றுக்கு அருகில் வளர்க்கப்பட்ட மூன்றரை அடி உயரமான இரண்டு கஞ்சா செடிகள் கண்டுப்பிடிக்கப்பட்டுள்ளன.

கைதுசெய்யப்பட்டுள்ள இளைஞர்களிடம் விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும், அவர்களை நுவரெலியா மாவட்ட நீதிவானிடம் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் கந்தப்பளைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (எ-இ)



## மொறகொட நியமனத்தில் தொடர்கின்றது சர்ச்சை!

கொழும்பு, செப். 7

அமைச்சரவை அந்தஸ்துடன் கூடிய இந்தியாவுக்கான இலங்கையின் தூதுவராக நியமிக்கப்பட்டுள்ள மிலிந்த மொறகொடவின் நியமனத்தை ஏற்றுக்கொள்ள முடியாது என இந்தியா திட்டவட்டமாக அறிவித்துள்ளது என்று கொழும்பு ஊடகமொன்று தெரிவித்துள்ளது.

அமைச்சரவை அந்தஸ்து பெற்ற முதலாவது உயர்ஸ்தானிகராக மிலிந்த மொறகொட நியமிக்கப்பட்டுள்ளார். அவர் தற்போது இந்தியாவில் தனது கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளபோதும், இந்தியக் குடியரசுத் தலைவரிடம் தனது நியமன நற்சான்றுப் பத்திரத்தை இன்னும் கையளிக்கவில்லை. நற்சான்றுப் பத்திரத்தில் உள்ள அமைச்சரவை அந்தஸ்து எனும் ஏற்பாட்டை நீக்குமாறு இந்திய வெளிவிவகார அமைச்சு இலங்கை வெளிவிவகார அமைச்சுக்கு எழுத்துமூலம் அறிவித்துள்ளது என்று கூறப்படுகின்றது.

தற்போது வழங்கப்பட்டுள்ள ஆவணங்களை இந்திய குடியரசுத் தலைவருக்குச் சமர்ப்பிக்க முடியாது எனவும் வெளிவிவகார அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது என்றும் தகவல் வெளியாகியுள்ளது. (எ-இ)

## நிர்ணய விலையை மீறினால் 1977க்கு அழைக்கலாம்



கொழும்பு, செப். 7

அரிசி மற்றும் சீனிக்கு விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாட்டு விலையை மீறி, அதிக விலைக்கு விற்பனை செய்யப்பட்டால், அது தொடர்பில் 1977 என்ற தொலைபேசி இலக்கத்துக்கு அழைத்துத் தகவல் வழங்க முடியும் என்று நுகர்வோர் விவகார இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவன்ன தெரிவித்துள்ளார்.

ஒரு கிலோ பொதி செய்யப்பட்ட சீனியை விற்பனை செய்யக்கூடிய அதிகபட்ச சில்லறை விலை 125 ரூபா எனவும், பொதி செய்யப்படாத ஒரு கிலோ சீனி 122 ரூபா எனவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அதே போன்று ஒரு கிலோ பொதி செய்யப்பட்ட சிவப்புச் சீனியின் விலை 128 ரூபா எனவும், பொதி செய்யப்படாத ஒரு கிலோ சிவப்புச் சீனி 125 ரூபா எனவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை கீரிச்சம்பா ஒரு கிலோ 125 ரூபா எனவும், வெள்ளை அல்லது சிவப்புச் சம்பா ஒரு கிலோ 103 ரூபா எனவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அத்துடன் சிவப்பு நாடு ஒரு கிலோவின் அதிகூடிய சில்லறை விலை 98 ரூபாவாகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

பச்சை அரிசி ஒரு கிலோவின் அதிகூடிய விலை 95 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இந்த விலையை விடவும் அதிக விலைக்குக் கடைக்காரரோ அல்லது வர்த்தக நிறுவனங்களோ விற்பனை செய்ய முடியாது. நிர்ணய விலையை மீறி விற்பனை செய்யப்படின் அது தொடர்பில் நுகர்வோர் அதிகாரசபை உரிய நடவடிக்கை எடுக்கும்.

அத்துடன் வியாபாரிகள் மற்றும் நிறுவனங்களுக்கு எதிராக விதிக்கப்படும் தண்டப்பணமும் அதிகரிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ம-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 60 வயதைக் கடந்த

## 3 லட்சம் முதியவர்கள் தடுப்பூசி ஏற்றவில்லை



கொழும்பு, செப். 7
நாட்டில் 60 வயதுக்கு மேற்பட்ட சுமார் 3 லட்சம் பேருக்கு இன்னும் முதலாவது கொரோனாத் தடுப்பூசி கூடக் கிடைக்கவில்லை என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

நாட்டில் கொரோனாவால் இறப்பவர்களில் 75 சதவீதம் பேர் வயதானவர்களே. எனவே, 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு தடுப்பூசி போடுவது முக்கியமானது என சங்கத்தின் செயலாளர் மருத்துவர் செனல் பெர்னாண்டோ கூறியுள்ளார்.

முதலில் திட்டமிட்டபடி 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு தடுப்பூசி போடப்பட்டிருந்தால், 90 சதவீத இறப்புகளைக் குறைத்திருக்கலாம் எனவும் மருத்துவர் குறிப்பிட்டார். (த-4)

# ஒக்ரோபரில் பாடசாலைகளை மீளத்திறப்பதற்குச் சாத்தியம்

### கல்வி அமைச்சு கூறுகின்றது



**கொழும்பு, செப். 7**
**எதிர்வரும் ஒக்ரோபர் மாத நடுப்பகுதியில் பாடசாலைகளை மீண்டும் திறக்கும் திட்டம் உள்ளது என்று கல்வி அமைச்சின் பாடசாலை விவகாரங்களுக்கான மேலதிக செயலாளர் எல்.கே.எம்.டி. தர்மசேன தெரிவித்தார்.**

கொழும்பு ஊடகம் ஒன்றுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

உயர்தர மாணவர்கள், க.பொ.த சாதாரண தர மாணவர்கள் மற்றும் புலமைப்பரிசில் மாணவர்களை முதலில் பாடசாலைக்கு தயார்படுத்துவதே எங்கள் நம்பிக்கை. அது ஒக்ரோபர் மாத நடுப்பகுதியில் இருக்கும் என்ற எண்ணம் எங்களுக்கு இருக்கிறது. அந்த முடிவை உறுதியாகச் சொல்ல முடியாது.

எதிர்காலத்தில் சுகாதார வழிகாட்டுதல்களின்படி நாங்கள் ஒரு திட்டத்தை உருவாக்குவோம். குறைந்த மாணவர் எண்ணிக்கையைக் கொண்ட பாடசாலைகளைத் தொடங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. ஆயினும் கொரோனாத் தொற்றின் பரவல் மற்றும் தீவிரத்தைப் பொறுத்தே பாடசாலைகளை திறக்கும் திட்டம் தீர்மானிக்கப்படும் - என்றார். (எ-இ)

## கொரோனாக் குண்டுகள் எதிர்காலத்தில் வெடிக்கும்

### திஸ்ஸ விதாரண குற்றச்சாட்டு



கொழும்பு, செப். 7
எதிர்காலத்தில் பல சக்தி வாய்ந்த கொரோனா வைரஸ் குண்டுகள் வெடிக்கும் என புகழ்பெற்ற விஞ்ஞானி எச்சரித்துள்ளார் என்று பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

தற்போதுள்ள தடுப்பூசிகள் கொரோனா வைரஸ்களுக்கு எதிராக 95 சதவிகிதத்துக்கு மேல் பயன் மிக்கனவாக இருக்கின்றன. ஆனால் எதிர்காலத்தில் மேலும் பல புதிய வைரஸ்கள் உருவாகும். இவற்றுக்கு புதிய தடுப்பூசிகள் தேவைப்படும். கொரோனா வைரஸ் வௌவால்களால் பரவும் என்று சில விஞ்ஞானிகள் கூறியிருப்பதற்கான வாய்ப்பை அவர் நிராகரிக்கவில்லை - என்றார். (எ-இ)

## ஒட்சிசன் தேவைப்படும் தொற்றாளர்கள் வீழ்ச்சி



கொழும்பு, செப். 7
கொரோனாத் தொற்றுடையவர்களில், ஒட்சிசன் தேவைப்படும் தொற்றாளர்களின் எண்ணிக்கையில் ஓரளவு வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல தெரிவிக்கையில்,

மக்கள் சுகாதார ஒழுங்கு விதிகளைத் தொடர்ந்தும் பின்பற்றும் பட்சத்தில் நாட்டில் கொரோனாத் தொற்றைக் கட்டுப்படுத்த முடியும். இதேவேளை, தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள தனிமைப்படுத்தல் ஊரடங்கை மீறிச் செயற்படுவோருக்கு எதிராக கடுமையான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு பொலிஸ்மா அதிபருக்கு அறிவித்துள்ளோம் - என்றார். (ம-4)

## கொரோனாவுக்கு சமமாக டெங்குத்தொற்றும் பரவல்



கொழும்பு, செப். 7
கொரோனாத் தொற்றுக்கு சமமாக, டெங்குத் தொற்றும் பரவலடைந்துள்ளது என்று தேசிய டெங்கு ஒழிப்பு பிரிவின் சமூக மருத்துவ நிபுணர் ஹிமாலி ஹேரத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

காலை 6 மணியிலிருந்து முற்பகல் 11 வரையிலும், மாலை 3 மணியிலிருந்து இரவு 7 மணி வரையிலும் டெங்கு நுளம்பின் தாக்கம் அதிகமாகக் காணப்படும்.

இந்த நாள்களில் அனைவரும் வீட்டிலிருந்தே வேலை செய்வதால், டெங்கு நுளம்புகள் தொடர்பில் அவதானமாக இருக்கவேண்டும். குழந்தைகளைத் தூங்கவைக்கும்போது நுளம்பு வலைகளை கண்டிப்பாகப் பயன்படுத்துவது முக்கியம்.

இந்த நாள்களில் வீட்டில் உள்ளவர்களுக்கு காய்ச்சல் இருந்தால், அது டெங்குக் காய்ச்சலாகவும் இருக்கக்கூடும். நாட்டில் கொரோனா வைரஸ் வேகமாகப் பரவுவது போன்று டெங்குக் காய்ச்சலும் பரவி வருகின்றது. டெங்கு காய்ச்சலுக்கான அறிகுறிகள் தென்பட்டால், உடனடியாக மருத்துவ ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும் - என்றார். (ம-4)

# கொரோனா வைரஸை அழிக்கும் இயந்திரங்கள்

### பிலியந்தலை இளைஞர் கண்டுபிடிப்பு



கொழும்பு, செப். 7
உலக நாடுகளுக்கே பெரும் அச்சுறுத்தலாக உள்ள கொரோனா வைரஸை அழிக்கக்கூடிய இரண்டு இயந்திரங்களை, பிலியந்தலை பகுதியைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் கண்டுபிடித்துள்ளார்.

காற்றிலுள்ள வைரஸ்கள் மற்றும் பக்றீரியாக்களை சில நொடிகளில் அழிக்கும் அதிவேக தானியங்கி இயந்திரம் மற்றும் பணம், ஆவணங்களில் காணப்படும் வைரஸ்கள் மற்றும் பக்றீரியாக்களை அழிக்கும் தானியங்கி கிருமித் தொற்று நீக்கிக் கருவி ஆகியவற்றை அவர் கண்டுபிடித்துள்ளார்.

பொறளை சுசமவர்தன மகா வித்தியாலயத்தில் உயர்தரம் வரை கற்ற இவர், கொழும்பு பகுதியில் உள்ள முன்னணி நிறுவனம் ஒன்றில் மோட்டார் பொறியியல் கற்கையைப் பயின்றுள்ளார். பின்னர் ஜப்பான் சென்று மோட்டார் பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கற்கையைக் கற்றுள்ளார். மலேசியாவிலும் இயந்திரப் பிரிவில் பயிற்சி பெற்றுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-4)

## பைஸர் தடுப்பூசிகள் 100,000 வந்தடைவு!




கொழும்பு, செப். 7
பைஸர் தடுப்பூசியின் ஒரு லட்சம் டோஸ்கள் இலங்கைக்கு நேற்றுக் கிடைக்கப் பெற்றுள்ளன.

குறித்த தடுப்பூசிகள் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இதேவேளை, 4 மில்லியன் சினோபார்ம் தடுப்பூசிகள் நேற்றுமுன்தினம் இலங்கைக்குக் கிடைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொரோனாத் தொற்றுவீதம் ஒக்ரோபரில் குறைவடையும்

## இராஜாங்க அமைச்சர் நம்பிக்கை



**கொழும்பு, செப். 7**

**இலங்கையில் கொரோனாத் தொற்று வீதம் எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் குறைவடையும் என்று இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜெயசுமன தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில், வைரஸ் பரவலில் ஏற்பட்டுள்ள குறைவு, கடுமையான நோய் மற்றும் இறப்புகளின் வீழ்ச்சி போன்றவை, ஒக்ரோபர் மூன்றாவது வாரத்தில் தெரியவரும். தற்போது பத்து மில்லியனுக்கும் அதிகமான மக்கள் தடுப்பூசியின் முழு அளவையும் பெற்றுள்ளனர்.

30 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு தடுப்பூசி செலுத்துவது விரைவில் முடிக்கப்படும். தற்போது 20 தொடக்கம் 30 வயதுக்குட்பட்டவர்களுக்கு தடுப்பூசி செலுத்த ஆரம்பித்துள்ளோம். அனைவரும் நோயெதிர்ப்பு சக்தியைப் பெற்றவுடன் பாதிப்புகளின் எண்ணிக்கை வெகுவாகக் குறையும் என்று நாங்கள் நம்புகிறோம். ஒக்ரோபர் மாதம் மூன்றாவது வாரத்தில் அதற்கான முடிவுகள் தெளிவாகத் தெரியும். 60 வயதுக்கு மேற்பட்ட மற்றும் பல்வேறு நோய்களால் பாதிக்கப்பட்ட சிலர், கொரோனாத் தடுப்பூசியைப் பெறத் தயங்குகின்றனர். இந்தத் தடுப்பூசி அவர்களின் உடல்நிலையை மேலும் சிக்கலுக்கு உள்ளாக வழிவகுக்கும் என்று அஞ்சுகின்றனர்.

எனினும் இந்தத் தவறான பயத்தைப் போக்கவேண்டும். அத்தகையவர்கள் கொரோனாத் தொற்றிலிருந்தும், இறப்பிலிருந்தும் தப்பிக்க ஒரே வழி தடுப்பூசி மட்டுமே - என்றார். (ம-4)

## மூன்றரை வயது சிறுமி கொரோனாவால் உயிரிழப்பு



கொழும்பு, செப். 7

அம்பலங்கொடை, தேவகொட பிரதேசத்தை சேர்ந்த மூன்றரை வயதுடைய சிறுமி ஒருவர் கொரோனா தொற்றுக்கு உள்ளாகி உயிரிழந்துள்ளதார். அதேவேளை, இந்தச் சிறுமி இதற்கு முன்னர் லுகேமியா நோயால் பாதிக்கப்பட்டிருந்தார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)


## உள்நாட்டில் உற்பத்தியானது 40,000 சேலைன் தொகுதி



கொழும்பு, செப். 7

அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தால் தயாரிக்கப்பட்ட முதலாவது சேலைன் தொகுதி சுகாதார அமைச்சின் மருந்து வழங்கல் பிரிவுக்கு கையளிக்கப்பட்டுள்ளது. 40 ஆயிரம் சேலைன் போத்தல்கள் இவ்வாறு கையளிக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது. (து-இ)

## தவறான முடிவெடுத்த கொரோனா நோயாளி



கொழும்பு, செப். 7

கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான நிலையில் சிகிச்சைபெற்று வந்த நபரொருவர், தவறான முடிவெடுத்து உயிர் மாய்த்துள்ளார்.

இந்தச் சம்பவம், கண்டியில் இடம்பெற்றுள்ளது. 38 வயதுடைய மூன்று பிள்ளைகளின் தந்தையொருவரே, கண்டி மருத்துவமனையின் 5ஆவது மாடியில் இருந்து குதித்து உயிர் மாய்த்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (து-இ)

## தனிமைப்படுத்தல் மீறல்: 66 ஆயிரம் பேர் கைது




கொழும்பு, செப். 7

தனிமைப்படுத்தல் ஊரடங்கு உத்தரவை மீறினர் என்ற குற்றச்சாட்டில் இதுவரை 66 ஆயிரம் பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த வருடம் ஒக்ரோபர் மாதம் தொடக்கம் இதுவரையான காலப்பகுதியில் தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறியமை தொடர்பில் சோதனை நடவடிக்கைகள் நாடு முழுவதும் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அதற்கமைவாக முகக்கவசம் அணியாமை மற்றும் தனிநபர் இடைவெளியைப் பேணாமை ஆகிய குற்றச்சாட்டுகளுக்காக சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ம-4)



## 5 கிராம அலுவலர்கள் கொரோனாவால் இறப்பு

கொழும்பு, செப். 7

கொரோனாத் தொற்றுக்குள்ளாகி இதுவரை 5 கிராம அலுவலர்கள் உயிரிழந்துள்ளனர் என்று கிராம அலுவலர்கள் சங்கத்தின் தலைவர் சுமித் கொடிகார தெரிவித்துள்ளார்.

அதேவேளை 500க்கும் மேற்பட்ட கிராம அலுவலர்கள் தொற்றுக்குள்ளாகியுள்ளனர். கொரோனாத் தொற்றுக்கு மத்தியில், அர்ப்பணிப்புடன் கடமையாற்றும் சுமார் 14 ஆயிரத்துக்கும் அதிகமான கிராம அலுவலர்கள் எவ்வித மேலதிக கொடுப்பனவுகளும் இன்றி கடமையாற்றி வருகின்றனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ம-4)

## 150 தொன் ஒட்சிசன் இந்தியாவிலிருந்து வந்தது

கொழும்பு, செப். 7

தொற்றின் மூன்றாம் அலைக்கு எதிரான போராட்டத்துக்காக இந்தியா சுமார் 150 தொன் ஒட்சிசனை இலங்கைக்கு அனுப்பியுள்ளது.

இலங்கைக்கான இந்தியாவின் 'லைவ்லைன்' திட்டத்தின்கீழ் இந்த ஒட்சிசன் விசாகப்பட்டினம் மற்றும் சென்னையிலிருந்து ஒரு கப்பல் மூலமாக கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்துள்ளதாக இந்தியத் தூதரகம் ருவிற்றர் பதிவில் உறுதிப்படுத்தியுள்ளது.

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவின் தனிப்பட்ட கோரிக்கைக்கு பதிலளிக்கும்விதமாக இந்திய அரசு கடந்த மாதத்தின் நடுப்பகுதியிலிருந்து இலங்கைக்கு அவசர ஒட்சிசன் பொருள்களை வழங்கி வருகிறது. முதற்கட்டமாக, இந்திய கடற்படையின் சக்தி கப்பல் ஓகஸ்ட் 25ஆம் திகதியன்று 100 தொன் திரவ மருத்துவ ஒட்சிசனுடன் கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்தமையும் குறிப்பிடத்தக்கது. (து-இ)

# சுற்றுலாப்பயணிகளுக்கு கட்டுப்பாடுகள் தளர்வு!

கொழும்பு, செப். 7

சுற்றுலாப் பயணிகளில் முழுமையாகத் தடுப்பூசியைப் பெற்றவர்கள் மற்றும் தனிமைப்படுத்தல் காலத்தை நிறைவு செய்தவர்கள் நாட்டின் ஏனைய பகுதிகளுக்குச் செல்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

சுகாதார சேவைகள் மாகாணப் பணிப்பாளர்கள், பிராந்தியப் பணிப்பாளர்கள், சுகாதார மருத்துவ அதிகாரிகளுக்கான கூட்டத்தில், சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மருத்துவர் அசேல குணவர்தன இதனை அறிவித்துள்ளார்.

கட்டாயத் தனிமைப்படுத்தலை நிறைவு செய்த, முழுமையாகத் தடுப்பூசிசெலுத்திக் கொண்ட சுற்றுலாப் பயணிகள், ஹோட்டல்களில் [illegible] தேசிய [illegible] உள்ளிட்ட வசதிகளை அனுபவிக்க முடியும். நாட்டில் பொது முடக்கம் அறிவிக்கப்பட்டுள்ள போதும், சுற்றுலாத்துறை தொடர்ந்து இயங்குவது பொருளாதாரத்துறைக்கு அவசியமானது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ம-4)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 22வது ஆண்டு நினைவலைகள்

மகிழ்வில்
07 . 01 . 1977

துன்பத்தில்
10 . 09 . 1999



அமரர்

## குணசிங்கம் ஞானேந்திரன்
(குட்டி கண்ணா)
(கோபிகா அடையக உரிமையாளர்)

கண்ணான கண்ணே ஞானேந்திரா - நீ
விண்ணுலகடைந்த விந்தைதான் என்னே!
மனதினில் மணிவிளக்காய் ஒளிர்ந்தவனே!
மனிதரில் மாணிக்கமாய் திகழ்ந்தவனே!
மகிழ்ச்சிப் பூங்காவாய் பூத்துக் குலுங்க வேண்டிய நீ
கவர்ச்சிப் பூங்காவன நாளிலே கண்மூடி மௌனமாய்
இன்னும் உனது பேச்சும், சிரிப்பொலியும்
நம் காதுகளில் கேட்கின்றதே - கண்ணா!
மின்னும் உன் பூமுகத்தை இனி
எப்போது நாம் காண்போம்,

எப்போதும் உன் நினைவில் ஏங்கும்

40/6, புகையிரத வீதி கிழக்கு ஒழுங்கை,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

# VACANCY ANNOUNCEMENT

**CANE intend to offer an employment opportunity to the motivated and energetic individual with heath background for the post of "Heath Education Coordinator"**

**Requirement:** A graduate with bachelor degree (Not necessary a medical graduate) who has some experience in public health.

**General Conditions:** 01. Should reside in the northern province of Sri Lanka.
02. Age should be below 55 year on the date of closing application

**Professional Competencies Required:**

01. High level of proficiency in written and spoken English, Sinhala and Tamil
02. Should have adequate knowledge and skills in handling IT related activities including managing websites and social media
03. Ability to communicate effectively in Tamil, Sinhala and English with officials and different stake holders including local public health experts
04. Work in a team environment inspiring trust and Co operation of other team members.
05. Capability to achieve the targets in time align plan

**Duration:** 12 Months

**Remuneration:** A monthly salary of LKR 50,000 and you will contribute 8% of your salary towards the Employee's Provident Fund and the employer will contribute 12% of your salary towards Employee's Provident Fund and 3% towards employees trust fund.

If you are an interested candidate, you have been requested to send your updated CV with two non-related
referees' details to the following e-mail ID, on or before 13.09.2021
e- mail ID: cane_jaffna@yahoo.com


CANE
No.05, Sabapathipillai Lane,
Uduvil,
Chunnakam.

CANE registered as a Voluntary Social Organization. Registration No: VS/SS/VOR/2009(iii) of 17.12.2009.

# மரண அறிவித்தல்

தோற்றம்
01 . 04 . 1938

மறைவு
06 . 09 . 2021



## திரு.கணபதிப்பிள்ளை சிவராமலிங்கம்
(முன்னாள் அதிபர் வேலணை கிழக்கு மகாவித்தியாலயம்)

நயினாதீவு 3ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் நாச்சிமார் கோவிலடியை வசிப்பிடமாகவும் தற்பொழுது கனடா ரொறன்ரோவில் வசித்தவருமாகிய கணபதிப்பிள்ளை சிவராமலிங்கம் நேற்று (06.09.2021) திங்கட்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை-கண்மணி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான பரமலிங்கம் - சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மருமகனும், பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், ரகுபதி (ஆசிரியர், யா/ சாவகச்சேரி இந்துக் கல்லூரி), மணிலால் (கனடா), வாசுகி (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், சொரூபவதி (ஓய்வுநிலை ஆசிரியர்), காலஞ்சென்ற நிறஞ்சினி மற்றும் சிவகுமார் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும், வித்தகன், லதாங்கி, கோபிகன், லக்ஷனா ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற சண்முகநாதபிள்ளை (முன்னாள் அதிபர், யா/மத்திய கல்லூரி) மற்றும் குமாரசூரியர் JP (ஓய்வு நிலை தபாலதிபர்- நயினாதீவு) மணிமேகலைராணி ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற விசாகப்பெருமாள், பத்மாசினிதேவி மற்றும் காந்திமலர், சிவபாலன் (ஓய்வுநிலை அதிபர்) ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

224, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 6181, 077 938 9478,
0014164593641

தகவல்:
சி. ரகுபதி(மகன்)
நா.க.குமாரசூரியர் JP (சகோதரர்)
077 310 7598

# கண்ணீர் அஞ்சலி



## சிவபாக்கியன் சிவயோகன்
(ஓய்வுபெற்ற விடுதி பொறுப்பு தாதிய உத்தியோகத்தர்,
விடுதி இல.7, போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்)

மறக்க முடியவில்லை - எம்
மனதால் ஏற்க முடியவில்லை
நேற்றிருப்பார் இன்றில்லை
இன்றிருப்பார் நாளை இல்லை
இது இயற்கையின் நியதி
இது எம் இதயத்தின் ஒலி


மின்னி மறையும்பு ர்னே
மீண்டும் ஓர் உறவை
இழந்து தவிக்கின்றோம்
ஈர விழிகளுடன் - எம்
அன்பு நண்பனின்
ஆத்மா சாந்திக்கும் - அவர்தம்
பிரிவால் துயருற்றிருக்கும்
மனைவி மக்கள் மற்றும்
உற்றார் உறவினருக்கும்
ஆழ்ந்த அனுதாபங்களையும்
இதய பூர்வமான இரங்கல்களையும்
இறையருள் துணையுடன்
தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஓம் சாந்தி

87,88 சாதாரண, விசேட பிரிவு
தாதிய உத்தியோகத்தர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



பிறப்பு 18 . 05 . 1935

இறப்பு 05 . 09 . 2021

## பொன்னையா நல்லையா

(முன்னாள் பிரபல புகையிலை வர்த்தகர்)

பலாலி றோட் கோண்டாவில் கிழக்கை பிறப்பிடமாகவும் வைரவப் புளியங்குளம், வவுனியாவை வதிவிடமாகவும் கொண்ட காலஞ்சென்ற பரிபூரணத்தின் அன்புக் கணவர் பொன்னையா நல்லையா (முன்னாள் பிரபல புகையிலை வர்த்தகர்) அவர்கள் கடந்த (05.09.2021) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் பத்மினி, சிலோசனா, புலேந்திரன் (கனடா), ரவீந்திரன் (லண்டன்), பாஸ்கரன் (லண்டன்), சர்மினி (கனடா) ஆகியோரின் தகப்பனாரும், புகழானந்தம், சண்முகராசா (சிவசக்தி - வவுனியா), ரஜனி கனடா), பாலேஸ் (லண்டன்), உமாதேவி (லண்டன்), சாந்தஜித் (கனடா) ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பலாலி வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

தகவல்:
மருமகன்மார்
பொ.புகழானந்தம் (077 615 2338)
ந.சண்முகராசா (077 739 4706)
36/1, 10ம் ஒழுங்கை,
வைரவபுளியங்குளம், வவுனியா)


**UNIVERSITY OF JAFFNA, SRI LANKA**

**VACANCIES**

University of Jaffna will entertain applications to reach us on or before **15th September 2021** from qualified Sri Lankan Nationals for the undermentioned **Temporary posts**.

**FACULTY OF ARTS**

- **Temporary Assistant Lecturer/ Temporary Tutor** in Hindu Civilization/ Hindu Philosophy (Saiva Sidhantha)

**Minimum Requirements/Qualifications:**

1. A Degree with specialization in the relevant subject with First Class or Second Class (Upper Division) Honours;

**OR**

2. A Degree with specialization in the relevant subject with Second Class (Lower Division) Honours;

**OR**

3. (a) A Degree with specialization in the relevant subject without Honours or any other degree with at least Second Class Honours,

**and**

(b) a recognized postgraduate degree in the relevant subject

**SALARY AND OTHER BENEFITS**

- **Temporary Assistant Lecturer** **Rs. 49,860/- p.m (Fixed)**
- **Temporary Tutor** **Rs. 40, 920/- p.m.(Fixed)**
  In addition to the above salary, the allowances approved by University Grants Commission applicable to the posts will also be paid.
- **Application Form**

Applicants are requested to fill online application form given in the link below.

Application form: https://forms.gle/5tGCC3bwVJBg8i7J9


Applicants are required to submit application form along with the scanned copy of the statement of degree and paid Bank Slip for the deposit of a sum of Rs.100/- credited to any branch of the People's Bank in favour of **University of Jaffna Collection Account Number: 970000090000387** of Bursar, University of Jaffna on or before the closing date.

**Submission of Applications will not be entertained in person.**

Only short-listed applicants will be called for an interview.

Registrar,
University of Jaffna


# மரண அறிவித்தல்



தோற்றம் 14 . 02 . 1924

மறைவு 06 . 09 . 2021

## வாரித்தம்பி காசிநாதர்

நுணாவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் நுணாவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட வாரித்தம்பி காசிநாதர் அவர்கள் நேற்று (06.09.2021) திங்கட்கிழமை காலமானார்.



தோற்றம் 25 . 12 . 1931

மறைவு 03 . 09 . 2021

## திருமதி மகேஸ்வரி காசிநாதர்

யாழ். சாவகச்சேரி நுணாவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட மகேஸ்வரி காசிநாதர் அவர்கள் 03-09-2021 வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார்கள், காலஞ்சென்றவர்களான திரு.திருமதி வாரித்தம்பி தம்பதிகளின் அன்பு மகனும், மருமகளும், காலஞ்சென்றவர்களான விஸ்வலிங்கம் தங்கம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், மகளும், மகேஸ்வரியின் அன்புக் கணவரும், காசிநாதர் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான இராஜபூபதி, சிவகுருநாதன், யோகநர்தன் மற்றும் அருளம்மா, நேசம்மா, தில்லைநாதன், தம்பிநாதன், செல்வராணி, செல்வமலர், சிவநாதன் ஆகியோரின் அன்பு மைத்துனரும், சகோதரியும், ரவீந்திரன்(சுவிஸ்), ரஞ்சினி(ஜேர்மனி), ராஜினி(ஜேர்மனி), கலாயினி (இலங்கை), விமலேந்திரன்(பிரித்தானியா), இந்திரகுமார்(பிரித்தானியா) ஆகியோரின் அன்புத் தந்தையாரும், தாயாரும், நந்தினி, சிவரட்ணம், மோகனராஜன், பாலேந்திரா கோமதி, ரஜனி ஆகியோரின் அன்பு மாமனும், மாமியும், சுலக்சன், பிரதட்ஷன்- பிரதீபா, சங்கீதன்- நம்மியா, கௌதம், கௌசிகா, நிவிசாந்- ஜனனி, அனுசாந், நிரோஜன், பிரணவன், சாய்ரூபன், கிரிசா, கரிஸ், சகானா ஆகியோரின் அன்புப் பேரனும், பேத்தியும், சாறாலேயா, லுயிஸ் அயான் ஆகியோரின் அன்புப் பூட்டனும் பூட்டியும் ஆவார்கள்.

மகேஸ்வரி காசிநாதரின் பூதவுடல் 08.09.2021 புதன்கிழமை அன்று பி.ப 03:00 மணியளவில் கோம்பயன் மணல் மயானத்தில் தகனம் செய்யப்படும்.

வாரித்தம்பி காசிநாதரின் பூதவுடல் 09.09.2021 வியாழக்கிழமை காலை 6.00 மணிக்கு கோம்பயன் மணல் மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு: ரஞ்சி - மகள் - +4917630165578
ரவி - மகன் - +41796762110
கலா - மகள் - +94775480078

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துயர் பகிர்கின்றோம்



யாழ் பல்கலைக்கழக முன்னாள் விலங்கியற்துறைத் தலைவரும்
பேராசிரியருமாகிய எமது பெரு மதிப்பிற்குரிய

**கலாநிதி. கார்த்திகேசு சித்திரவடிவேலு**

அவர்கள் 03.09.2021 அன்று இறைபதமடைந்த செய்தி அறிந்து ஆழ்ந்த துயர் அடைவதுடன், அன்னாரின் பிரிவால் தவிக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின் றோம்.

**ஆசிரியர்கள், ஊழியர்கள், மாணவர்கள்,**
**விலங்கியற்துறை,**
**யாழ் பல்கலைக்கழகம்.**

## மரண அறிவித்தல்

பிறப்பு 03 . 07 . 1938



இறப்பு 02 . 09 . 2021

**சின்னையா சிவபாதம்**

தாவடி வடக்கு, தாவடியை பிறப்பிடமாகவும் துணைவி வட்டுக்கோட்டை, கோண்டாவில் மேற்கை வதிவிட மாகவும் கொண்ட திரு. சின்னையா சிவபாதம் அவர்கள் கடந்த (02.09.2021) அன்று சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையா இராசம்மா தம்பதியரின் சிரேஸ்ட புதல்வனும், காலஞ்சென்றவர் களான சுப்பிரமணியம் மங்கையற்கரசி தம்பதியரின் மருமகனும், இந்திராதேவியின் அன்புக் கணவரும், சிவகரனின் அன்புத் தந்தையும், சிறிகலாவின் அன்பு மாமனாரும், கனிஸ்கா, தியானிக்கா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கடந்த (03.09.2021) அன்று வீட்டில் நடைபெற்று, அன்னாரின் பூதவுடல் தாவடி இந்து பொது மயானத்தில் மு.ப 10 மணியளவில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**இந்திராபதி,**
**கொண்டாவில் மேற்கு,**
**கோண்டாவில்.**
**021 221 6286**

**தகவல்:**
**சிவபாதம், சிவகரன்.**

## மரண அறிவித்தல்



**பொன்னு மகாதேவன்**

அச்சுவேலியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னு மகாதேவன் நேற்று (06.09.2021) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் மருக்கொழுந்துவின் அன்புக் கணவரும், கிருபா கரன், சுமதி, ஜெயந்தி (ஜேர்மனி), வசந்தி, சுதாகரன் ஆகியோ ரின் அன்புத் தந்தையும், பவானந்தன் (ஜேர்மனி), குண லிங்கம் (C.E.B), ஸ்ரீஸ்கந்தராஜா, சுந்தரவடிவு, காலஞ்சென்ற ஜனனி ஆகியோரின் அன்பு மாமனும் பிரகாஷ், அபிராம், துஷாந்தி, விஷ்வினி, சிவஸ்துதி, காவியா, தர்சி, நிவேதித்தன் ஆகியோரின் பேரனும், நிரேஷ், மானேஷ் ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.09.2021) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் மு.ப. 10.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக அச்சு வேலி முழக்கன் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**அச்சுவேலி வடக்கு,**
**அச்சுவேலி.**
**076 103 7060**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## சமையல் தெரிந்த பெண்கள் வேலைக்கு தேவை

முட்டை மா மற்றும் இனிப்புப்பண்டங்கள் செய்யத் தெரிந்த கைதேர்ந்த பெண்கள் வேலைக்குத் தேவை.

குழந்தைகளுக்கான உணவுப் பொருட்கள் செய்யத் தெரிந்தவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

**தொடர்புகளுக்கு : 076 555 5550**

**GOOFOO**

## கண்ணீர் அஞ்சலி

யாழ்ப்பாணம் நீர்வேலி அரசகேசரிப்பிள்ளையார் ஆலயத்தின்
பிரதம குரு **சிவஸ்ரீ சோமதேவக்குருக்கள்**
அவர்களின் துணைவியார்

**ஜெயந்தி அம்மா**

அவர்கள் சனிக்கிழமை இரவு காலமானார் என்ற செய்தி துயரத்துக்குரியதாக அமைந்துவிட்டது. அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்தித்து அன்னாரது குடும்பத்திற்கு எங்கள் அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

**இராஜேந்திர சுவாமிநாதக் குருக்கள்,**
**பாலமுருகன்சர்மா**
**நீர்வேலி கந்தசுவாமி தேவஸ்தானம், நீர்வேலி.**

## துயர் பகிர்கின்றோம்

இறை பணிக்காக 31 . 12 . 1942



இறை பதத்தில் 02 . 09 . 2021

**சிவஸ்ரீ சி.சிவசுப்பிரமணிய சிவாச்சாரியார்**

**சுழிபுரம் ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி கோயில் (பெரியதம்பிரான்), முன்னாள் பிரதம குரு**

எமது கோயில் நித்திய நைமித்திய பூஜைகளையும் கிரியைகளையும் சிறப்பாகவும் ஒழுங்காகவும் நடத்தியதுடன், கடந்த 2005 ம் ஆண்டில் இறுதியாக நடைபெற்ற புனருத்தாரண மஹா கும்பாபிஷேக நிகழ்வினையும் பிரதம குருவாகவிருந்து செயற்படுத்திய எமது மதிப்பிற்கும் அன்பிற்குமுரிய குருக்கள் ஐயாவின் மறைவு குறித்து துயருறுவதுடன் எமது ஆழ்ந்த துயரினை அன்னாரது குடும்பத்தினருக்கு தெரிவிப்பதுடன் கந்தன் கழலில் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல ஸ்ரீ கதிர் வேலாயுதப் பெருமானின் பாதம் பணிந்து நிற்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

**சுழிபுரம்.**

**பரிபாலன சபையினரும்**
**முருகனடியார்களும்.**

## மரண அறிவித்தல்



**வல்லிபுரம் பரமசாமி**

அரியாலை ஆசீர்வாதப்பர் வீதியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வல்லிபுரம் பரமசாமி நேற்று (06.09.2021) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற றோசாமலரின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற வல்லிபுரம் நேசம்மா தம்பதியரின் அன்பும் பாசமிகு மகனும், காலஞ்சென்ற தம்பு-இலட்சுமி தம்பதியரின் மருமகனும், சத்தியேந்திரா, பியூட்டன், சுகிர்தா, மைதிலி, காலஞ்சென்ற அருட்திரு V.P.தனேந்திரா ஆகியோரின் பாசமிகு தகப்பனாரும், ஜெயசூரியா, துவாரகன், கிறிஸ்ரீனா, அனுஷா ஆகியோரின் அன்பு மாமனாரும், பானுஜா, வரோதயன், யேசுதாசன், ஷெரினா, கனிலீசா, சுசான் அம்றோஸ், அஷான் சுவிங்கிலி, பெரிடில்ஷான், அரோன், ரிஷான் ஆகியோரின் பாசமிகு பேரனும், வருனியாவின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதி நல்லடக்க ஆராதனை நேற்று (06.09.2021) அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, நல்லூர் பரி.யாக்கோபு ஆலய சேமக்காலையில் மாலை 4.00 மணிக்கு நல்லடக்கம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**233, ஆசீர்வாதப்பர் வீதி,**
**அரியாலை,**
**077 557 0420**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

# இராணுவமயமாக்கலுக்கே அவசரகாலச்சட்ட நடைமுறை

*ரவூப் ஹக்கீம் எம்.பி. தெரிவிப்பு*

கொழும்பு, செப். 7

நாட்டில் இராணுவமயமாக்கலை நடைமுறைப்படுத்தவே அரசு அவசர காலச் சட்டத்தை பிரகடனப்படுத்தியுள் ளது. இதற்காகப் பல நாடகங்களை அரசு அரங்கேற்றுகின்றது."

இவ்வாறு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங் கிரஸின் தலைவரும் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடை பெற்ற அவசரகாலச் சட்டம் மீதான விவாதத்தில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித் ததாவது:

"அத்தியாவசிய சேவைகளுக்காக என்றால் பொதுமக்கள் பாதுகாப்பு சட் டத்தின் 3 அல்லது 17 ஆம் பிரிவைக் கொண்டுவந்திருக்கலாம். ஏன் அரசு அதனைச் செய்யவில்லை? தேவை யற்ற, வேண்டப்படாத அவசரகாலச் சட்டத்தையே அரசு பிரகடனப்படுத்தி யுள்ளது. இது நாட்டில் இராணுவ மய மாக்கலை நடைமுறைப்படுத்துவதை யும் எதிர்க்கட்சிகளை அடக்குவதை யும் உள்நோக்கமாகக்கொண்டது.

அரசு பல நாடகங்களை நடத்துகின் றது. ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு காட்சிகள் அரங்கேற்றப்படுகின்றன. இதன் மூலம் மக்களை அரசு ஏமாற் றுகின்றது. வலுக்கட்டாயமாக சில நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படு கின்றன. அந்நிய செலாவணி பிரச்சி னையால் பொருள்களை இறக்குமதி செய்யமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இலங்கை லெபனானின் நிலைக்குச் செல்வதாகக் கூறப்படுகின்றது. லெப னானில் 70 வீதம் வறுமை. அந்த நிலைக்கே இலங்கையும் செல்கின் றது" - என்றார். (த-22)

# வயோதிபத் தம்பதி கொரோனாவால் சாவு

சாவகச்சேரி, செப். 7

கொரோனாத் தொற்றால் பாதிக் கப்பட்ட வயோதிபத் தம்பதியர் உயிரிழந்துள்ளனர்.

சாவகச்சேரி நுணாவில் கிழக் கைச் சேர்ந்த தம்பதியரே இவ் வாறு உயிரிழந்துள்ளனர்.

சாவகச்சேரி ஆதார மருத்துவம னையில் ஒரு வாரமாக சிகிச்சை பெற்று வந்த நுணாவில் கிழக் கைச் சேர்ந்த 97 வயது முதிய வர் நேற்று முன்தினம் ஞாயிற் றுக்கிழமை இரவு உயிரிழந்தார்.

இவரது 89 வயதுடைய மனைவி சாவகச்சேரி ஆதார மருத்துவம னையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில், கடந்த வெள்ளிக்கி ழமை உயிரிழந்தார். இருவரின் சடலங்களும் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளன. (ம-4,159)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டுக்கு அவசியமானது கலப்புத் தேர்தல் முறையே

கொழும்பு, செப். 7

"தொகுதிவாரி மற்றும் விகிதாசார பிரதிநிதித்துவத்துடன் கூடிய கலப்புத் தேர்தல் முறைமையே நாட்டுக்கு அவசியம்" என்று தேர்தல் சட்டங்கள் மற்றும் தேர்தல் முறைமை தொடர்பாகப் பொருத்தமான சீர்திருத்தங்களை அடையாளம் காண்பதற்கும் தேவையான திருத்தங்களைப் பரிந்துரைப்பதற்குமான நாடாளுமன்ற விசேட குழுவில் மக்கள் ஐக்கிய முன்னணி நேற்றுத் தெரிவித்தது.

தற்பொழுது நடைமுறையில் காணப்படுவது போன்று நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை 225ஆக இருக்க வேண்டும் என்றும், இதில் 140 பேர் தொகுதிவாரி முறையின் அடிப்படையிலும், 70 பேர் மாவட்ட அடிப்படையிலும், எஞ்சிய 15 பேர் தேசியப் பட்டியலின் ஊடாகவும் தெரிவுசெய்யப்பட வேண்டும் எனவும் அந்தக்கட்சியின் உபசெயலாளர் இராஜாங்க அமைச்சர் சிசிர ஜயகொடி விசேட குழு முன்னிலையில் தெரிவித்தார்.

அத்துடன், அரச மற்றும் தனியார் அச்சு ஊடகங்கள், இலத்திரனியல் ஊடகங்கள் மற்றும் இணைய ஊடகங்களால் வேட்பாளர்களின் சமத்துவத்துக்கு தீங்கிழைக்கும் வகையில் மேற்கொள்ளப்படும் பரப்புரைகளைத் தடுப்பதற்கு சட்ட ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று மக்கள் ஐக்கிய முன்னணியின் உதவிச் செயலாளர், நாடாளுமன்ற உறுப்பினர் யதாமினி குணவர்த்தன இந்தக் குழு முன்னிலையில் தெரிவித்தார்.

(த)

## சிறுநீரகம் தேவை

B+ இரத்த வகையை கொண்ட சிறுநீரகம் தேவை.

தொடர்பு:

**0777 110 687**

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

### அமரர் திருமதி நடராசா மகேஸ்வரி



தோற்றம் 22.05.1939 — மறைவு 08.08.2021

காலமெல்லாம் அரவணைத்து
அன்பு எனும் அமுதூட்டி
பாசமழை பொழிந்த அன்னையே
எம்மை மீளாத்துயரில் ஆழ்த்தி
கண்ணீரில் மிதக்க விட்டு சென்றதேனோ
உமது ஆத்மா சாந்தியடைய
எல்லாம் வல்ல இறைவனை
மன்றாடுகிறோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

அன்னாரின் பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்.

சித்திவிநாயகர் கோவிலடி,
உடுவில் தெற்கு, மானிப்பாய். (சுதுமலை)

## மரண அறிவித்தல்

மலர்வு 09.01.1939 — மறைவு 06.09.2021



### கந்தையா சிவநாதன்

**(ஓய்வுபெற்ற ரெலிகொம் அதிகாரி)**

தெல்லிப்பளை வீமன் காமத்தைச் சேர்ந்த க. சிவநாதன் காலமானார்.

அன்னார் திருஞானசுந்தரியின் கணவரும், பவானி, சுதர்சன் (அமெரிக்கா), நளினி (லண்டன்), பிரதீபன் (லண்டன்) ஆகியோரின் தந்தையும், கந்தையா இலட்சுமி ஆகியோரின் மகனும், பாலசுந்தரம் மனோன்மணியின் மருமகனும் துவாரகன், பிரணவன், துளசி, மயூரி, பிரசாந்த், ஹரிசாந், பிரியங்கா, சஹானா ஆகியோரின் பாட்டனும், சபாநாதன் (ஓய்வு பெற்ற அதிபர்) மற்றும் சிவ இன்பநாயகி ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.09.2021) செவ்வாய் கிழமை மு.ப. 9:30 மணிக்கு வீமன்காமம் நெசவு சாலை ஒழுங்கையில் உள்ள இல்லத்தில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**செ.கிரிதரன்**
**தொடர்பு: 075 0458 213**
**க.சபாநாதன்**
**077 4848900**

## முதலாம் பக்கத் தொடர்ச்சி...

### ஐரோப்பிய....

என்று வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றுகையில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

எமது நாட்டுத் தலைவர்களுக்கு ஆசியாவில் மட்டுமல்ல சர்வதேச மட்டத்திலும் மதிப்பும், பெரும் வரவேற்பும் உள்ளது. இதனால் நாம் பெருமிதம் கொள்ள வேண்டும்.

ஐரோப்பாவில் நடைபெறும் உயர் மட்ட சர்வதேச மாநாட்டில் பங்கேற்று, ஆரம்ப நிகழ்வில் பிரதான உரையாற்றுமாறு பிரதமர் மஹிந்த ராஜபக்சவுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. இத்தாலியின் போலோக்னா நகரிலேயே குறித்த சர்வதேச மாநாடு நடைபெறவுள்ளது. அடுத்தவாரம் போலோக்னா பல்கலைக்கழகத்தில் மாநாடு ஆரம்பமாகும்.

போலோக்னா பல்கலைக்கழகம் என்பது ஐரோப்பாவில் உள்ள பழமையான பல்கலைக்கழகமாகும். பிரிட்டனில் ஒக்ஸ்போர்ட் மற்றும் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகங்களைவிடவும் அது பழமையானது.

இந்த சர்வதேச மாநாட்டில் இராஜதந்திரிகள் பங்கேற்பார்கள். இலங்கை தொடர்பில் ஒரு சில தரப்புகளால் ஐரோப்பாவில் உருவாக்கப்பட்டுள்ள மாயையை உடைத்து, உண்மை நிலைவரத்தை விளக்குவதற்கு இது சிறந்த சந்தர்ப்பமாகும்.

இதன்போது இத்தாலி நாட்டின் பிரதமர், வெளிவிவகார அமைச்சர், ஐரோப்பிய நாடாளுமன்றத்தின் சபாநாயகர் ஆகியோரை பிரதமர் மஹிந்த ராஜபக்ச சந்தித்து பேச்சு நடத்தவுள்ளார்.

மேற்படி சர்வதேச மாநாடு இத்தாலியில் நடைபெறும் சூழ்நிலையில்தான் ஜெனிவா நகரில் மனித உரிமைகள் பேரவையின் 48ஆவது கூட்டத்தொடரும் நடைபெறுகின்றது. இந்த மாநாட்டில் இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் என்ற வகையில் 'ஒன்லைன்' ஊடாக நான் பங்கேற்கவுள்ளேன்.

6 மாதங்களுக்கு முன்னர் ஜெனிவா மாநாடு நடைபெற்றது. கொரோனா நெருக்கடி நிலைமைக்கு மத்தியிலும் இலங்கையில் முன்னெடுக்கப்பட்ட முன்னேற்றகரமான நடவடிக்கைகள் தொடர்பில் அப்போது தெளிவுபடுத்தப்பட்டது." என்றார். (த-44)

### எந்தவொரு....

வாள் பின்னர் எதற்கு? அதேபோல் மக்களின் நலன்களுக்கு பயன்படாத சட்டம் நடைமுறையில் இருப்பதில் பயனென்ன?"

இவ்வாறு நாடாளுமன்றில் தெரிவித்தார், பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர.

அத்தியாவசிய உணவுப்பொருள்களை விநியோகிப்பதற்கான அவசர கால நிலைமைகள் குறித்த ஒழுங்கு விதிகள் மீதான விவாதம் நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்றது. அதில் அவர் உரையாற்றும்போது மேலும் தெரிவிக்கையில்,

கொரோனா நெருக்கடி நிலைமையில் எதிர்க்கட்சியினர் வைரசுடன் கூட்டுச் சேர்ந்து அரசை வீழ்த்தும் வேலைத்திட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர். பொதுமக்கள் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் மக்களின் நலன்களுக்காக அவசரகாலச் சட்டத்தை நடைமுறைப்படுத்த முடியும். இப்போது இந்தச் சட்டம் எதற்கு என்ற கேள்விக்கு எம்மிடம் பதில் உள்ளது.

நாடு பல்வேறு இடர்பாடுகளைச் சந்தித்தபோதிலும் ஒரு சந்தர்ப்பத்திலேனும் நாம் உணவுப் பஞ்சத்துக்கு முகங்கொடுக்கவில்லை.

கொரோனா வைரஸ் தாக்கத்தின் பின்னரே இதன் தாக்கம் எமக்கு வெகுவாக விளங்கியது. பொருளாதாரத்தில் நெருக்கடி நிலை ஏற்பட்டது. ஒரு நாளைக்கு நாட்டை முடக்குவதனால் 15 கோடி ரூபா நட்டம் ஏற்படுகின்றது. வருடாந்த வருமானம் 41 பில்லியன் ரூபாவாகும். அதில் பதினைந்து பில லியன் ரூபா நட்டம் ஏற்படுகின்றது என்றால் அது மிகப்பெரிய தாக்கமாகும். இவ்வாறான சூழலில்தான் அரசு தலையிட்டு தீர்வைப் பெற்றுக்கொண்டுள்ளது. நாட்டு மக்களுக்கு கேடு விளைவிக்கப்படுகின்ற வேளையில், மக்களின் பணம் கொள்ளையடிக்கப்படுகின்ற நிலையில் அதனை தடுக்காது வேடிக்கை பார்ப்பதற்கு எதற்கு அரசு? அதனைத் தடுக்க ஜனாதிபதி அவசர காலச் சட்டத்தை நடைமுறைப்படுத்தியுள்ளார். இது அனைத்தும் மக்களுக்காகவே செய்யப்படுகின்றது.

மக்களின் நலன்களுக்காக அவசர காலச்சட்டம் மட்டுமல்ல, எந்தச் சட்டத்தையும் கையாள நாம் தயாராகவே உள்ளோம். மக்களும் அதனை வரவேற்கின்றனர். ஆனால் எதிர்க்கட்சி மட்டுமே அதனை எதிர்க்கின்றது - என்றார். (த-இ)

### 213 பேருக்கு....

யாழ். மாவட்டத்தில் நேற்று மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் 15 தொற்றாளர்களும் அன்டிஜென் பரிசோதனையில் 198 தொற்றாளர்களும் இனங்காணப்பட்டுள்ளனர்.

இந்தநிலையில் மாவட்டத்தின் மொத்த தொற்றாளர்களின் எண்ணிக்கை 13ஆயிரத்து 944 ஆக உயர்வடைந்துள்ளது. நேற்று மாலை வரையான இறப்பு எண்ணிக்கை 281 ஆக உயர்வடைந்துள்ளது. (த-20)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குடாநாட்டில்....

அவர் மேலும் தெரிவிக்கையில்,
யாழ்ப்பாண மாவட்டத்தில் நேற்று 213 பேருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இதுவரை 13 ஆயிரத்து 944 பேருக்கு மாவட்டத்தில் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.
தொற்றால், 274 பேர் இதுவரை உயிரிழந்துள்ளனர். அதேநேரம் 5ஆயிரத்து 641 குடும்பங்கள் யாழ்ப்பாணத்தில் தனிமைப்படுத்தலில் உள்ளன.
யாழ்ப்பாண மாவட்டத்தில் தடுப்பூசி ஏற்றும் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. முதலாவது டோஸ் தடுப்பூசி 2 லட்சத்து 96 ஆயிரத்து 315 பேருக்கு வழங்கப்பட்டுள்ளது. அதேநேரம் இரண்டாம் கட்டத் தடுப்பூசி நேற்றுவரை 2 இலட்சத்து 15 ஆயிரத்து 552 பேருக்கு வழங்கப்பட்டுள்ளது.

**18 முதல் 30 வயது வரையான நபர்களுக்குத் தடுப்பூசி**

18 வயதுக்கும் 30 வயதுக்கும் இடைப்பட்டவர்களுக்கு தடுப்பூசி வழங்குவதற்குரிய ஏற்பாடுகள் சுகாதாரப் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதற்குரிய விவரங்கள் பிரதேச செயலகங்கள் ஊடாக அனுப்பியிருக்கிறோம். அதற்குரிய அறிவுறுத்தல் கிடைத்தபின் தடுப்பூசி வழங்கும் செயற்பாடு ஆரம்பிக்கப்படும். கிராமங்கள் தோறும் 60 வயதுக்கு மேற்பட்டோருக்கு வீடுகளுக்குச்சென்று தடுப்பூசி வழங்கும் செயற்பாடு நடைபெறுகின்றது.
தற்பொழுது யாழ்ப்பாண மாவட்டத்தில் தொற்று நிலைமையானது அபாய நிலையிலேயே காணப்படுகின்றது. பொதுமக்கள் பொது முடக்கத்தை துஷ்பிரயோகம் செய்யாது தங்களையும் பாதுகாத்து சமூகத்தையும் பாதுகாக்கும் வகையில் செயற்படவேண்டும். - என்றார். (த-26)

## கோத்தாபய ....

தெரிவித்தார்.
நாடாளுமன்றில் நேற்று உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.
“நாடாளுமன்ற உறுப்பினர் என்ற வகையில் நான் சர்வாதிகாரத்தை ஆதரிக்கின்றேன். எதிர்க்கட்சிகள் கடந்த காலத்தில் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவை ஒரு சர்வாதிகாரியாக சித்திரித்திருந்தனர். இப்போதும்கூட அவ்வாறே அவர்கள் உணர்கின்றனர்.
ஜனாதிபதி மக்களுக்கு ஆற்றிவரும் பல்வேறு சேவைகளைப் பார்த்து எதிர்க்கட்சிகள் கவலையடைந்துள்ளன.”
- என்று அவர் மேலும் தெரிவித்தார். (த-இ)

## மஹிந்தவின் ....

ஆலோசனைச் சபையை ஜனாதிபதி அமைக்கவேண்டும்.
இவ்வாறு தெரிவித்தார், அபயராம விகாரையின் விகாராதிபதி முருந்தெட்டுவே ஆனந்த தேரர்.
அபயராம விகாரையில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,
அத்தியாவசியப் பொருள்களை பெற்றுக்கொள்ளும்போது மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொள்கிறார்கள். சதொச விற்பனை நிலையத்தின் முன்பாக மக்கள் நீண்ட வரிசையில் காத்திருக்கிறார்கள்.
கொரோனாத் தாக்கத்தின் காரணமாக சுபீட்சமான கொள்கைத் திட்டத்தை ஜனாதிபதியால் செயற்படுத்த முடியாமல்போயுள்ளது. இனிவரும் காலங்களிலாவது சுபீட்சமான கொள்கைத் திட்டத்தை செயற்படுத்த வேண்டுமாயின் ஜனாதிபதி சிறந்த ஆலோசனைகளைப் பெற வேண்டும். என்றார். (த-இ)

## ஏனைய ....

ரணில் விக்கிரமசிங்க அறிவித்துள்ளார்.
ஐக்கிய தேசியக் கட்சியின் 75ஆம் ஆண்டு நிறைவை முன்னிட்டு கட்சித் தலைமையகத்தில் நேற்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்வில் உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.
பழைய ஐக்கிய தேசியக் கட்சி இப்போது இல்லை. இன்று புதியதோர் ஐக்கிய தேசியக் கட்சியே காணப்படுகின்றது. நாட்டைக் கட்டியெழுப்புவதற்குத் தேவையான குறுகிய மற்றும் நீண்டகாலத் திட்டங்கள் ஐக்கிய தேசியக் கட்சியிடம் இருக்கின்றன. கட்சியை மீளக்கட்டியெழுப்பும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இளைஞர்கள் இணைந்துகொள்ள வேண்டும். - என்று அவர் அழைப்பு விடுத்தார். (த-22)

## மேலும் 180 ....

திணைக்களம் அறிவித்துள்ளது.
இதன்படி நாட்டில் இதுவரையில் பதிவாகியுள்ள கொரோனா சாவுகளின் மொத்த எண்ணிக்கை 10 ஆயிரத்து 320 ஆக அதிகரித்துள்ளது.
நேற்றுமுன்தினம் உயிரிழந்த 180 பேரில் 97 ஆண்களும், 83 பெண்களும் அடங்குகின்றனர் என்றும் அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.
இதில் 05 ஆண்கள், 02 பெண்கள் உட்பட 07பேர் 30 வயதுக்குட்பட்டவர்களாவர். 24 ஆண்கள், 16 பெண்கள் என 40 பேர் 30 க்கும் 59 வயதுக்கு இடைப்பட்டவர்களாவர். 133 பேர் 60 வயதுக்கு மேற்பட்டவர்களாவர். இதில் 68 ஆண்களும், 65 பெண்களும் அடங்குகின்றனர். (த-22)

## 3,173 தொற்றாளர்கள் ....

இதற்கமைய நாட்டில் இதுவரை 4 இலட்சத்து 65 ஆயிரத்து 940 பேர் கொரோனாத் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.
இதேவேளை, நாட்டில் மேலும் ஆயிரத்து 952 பேர் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்துள்ளனர். இதன்படி நாட்டில் இதுவரை மொத்தமாக 3 இலட்சத்து 86 ஆயிரத்து 509 பேர் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்துள்ளனர். (த-22)

## அவசரகால ....

அத்தியாவசிய உணவு விநியோகம் தொடர்பிலான அவசரகாலச்சட்ட ஒழுங்கு விதிகள் தொடர்பான பிரகடனத்தை ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச கடந்த 30ஆம் திகதி அறிவித்திருந்தார். அது நாடாளுமன்றில் நேற்று விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே 81 மேலதிக வாக்குகளால் நிறைவேறியது. அதற்கு ஆதரவாக 132 வாக்குகளும் எதிராக 51 வாக்குகளும் வழங்கப்பட்டன.
நாடாளுமன்றம் நேற்று முற்பகல் 10 மணிக்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தலைமையில் கூடியது. அவசரகாலச்சட்ட ஒழுங்கு விதிகள் மீதான விவாதத்தை [illegible] சர் மஹிந்தான[illegible] ஆரம்பித்து வைத்து உரையாற்றினார்.
முற்பகல் 10.00 மணி முதல் மாலை 4.30 மணிவரை விவாதம் நடைபெற்றது.
பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 2ஆவது பிரிவில் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்துக்கு அமைய அத்தியாவசிய உணவுப் பொருள்களை வழங்கி, மக்களை பாதுகாப்பதற்கும், உணவு மாபியாக்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்காகவுமே இந்த அவசரகாலச்சட்ட ஒழுங்குவிதி நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டதாக ஆளுங்கட்சியினர் விவாதத்தில் கருத்துகளை முன்வைத்தனர்.
எனினும், அரசுக்கு எதிரான போராட்டங்களை ஒடுக்கவும், இராணுவ ஆட்சியை ஏற்படுத்தவுமே அவசரகாலச் சட்டம் கொண்டுவரப்பட்டுள்ளது என எதிரணிகள் சுட்டிக்காட்டின.
விவாதத்தின் இறுதியில் எதிர்க்கட்சிகள் வாக்கெடுப்பைக் கோரின. இதன்படி நடத்தப்பட்ட வாக்கெடுப்பில் அவசரகாலச் சட்ட ஏற்பாடுகளுக்கு ஆதரவாக 132 வாக்குகளும், எதிராக 51 வாக்குகளும் அளிக்கப்பட்டன.
ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவும், அரச பங்காளிக்கட்சிகளும் ஆதரவாக வாக்களித்தன. ஐக்கிய மக்கள் சக்தி ,தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு ,ஜே.வி.பி. ஆகியன எதிர்த்து வாக்களித்தன.

## முல்லைத்தீவுப்....

ப்பட்டார்.
இலங்கை முல்லைத்தீவு மாவட்டம் முள்ளியவளை பகுதியைச் சேர்ந்த 19 வயதுடைய பெண்ணே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.
இறுதிக்கட்டப்போரின்போது இலங்கையிலிருந்து தப்பி தமிழகம் வந்து இலங்கை ஏதிலிகள் மறுவாழ்வு முகாமில் தங்கியிருந்தார். அங்குள்ள ஒருவருடன் ஏற்பட்ட காதலால் 2018 ஆம் ஆண்டு விமானம் மூலம் சென்னை வந்துள்ளார் என்பது விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது.
விசா முடிந்த பின்னர் இலங்கைக்கு திரும்பிச்செல்லாமல் சென்னை வளசரவாக்கத்தில் உள்ள உறவினர் வீட்டில் சட்டவிரோதமாக அவர் தங்கி வாழ்ந்து வந்துள்ளார்.
அந்தப் பெண்ணின் தந்தை, முல்லைத்தீவு மாவட்டம் முள்ளியவளை கிராமத்தில் வசித்து வருகின்றார். அவருக்கு உடல்நிலை சரியில்லாததால் இலங்கைக்கு திரும்பி செல்வதற்காக அந்தப் பெண் நேற்று அதிகாலை தனுஷ்கோடியிலிருந்து நாட்டுப்படகு மூலம் சட்டவிரோதமாக முல்லைத்தீவுக்கு புறப்பட்டுள்ளார்.
எனினும், தனுஷ்கோடியை அடுத்த இரண்டாம் மணல் திட்டுப் பகுதியில் இந்தியக்கடலோர காவற்படையின் ரோந்துப் படகு வந்ததை அவதானித்த படகோட்டி கஸ்தூரியை முதல் மணல் திட்டுப் பகுதியில் இறக்கிவிட்டு சென்றுவிட்டார் என்று கூறப்படுகிறது.
இதனையடுத்து, அந்தப்பகுதியில் மீன்பிடித்துகொண்டிருந்த மீனவர்கள் கொடுத்த தகவலின் அடிப்படையில் ராமேஸ்வரம் மெரைன் பொலிஸார் படகில் சென்று அந்தப் பெண்ணை கைது செய்து தனுஷ்கோடிக்கு அழைத்து வந்தனர்.
முதல் கட்ட விசாரணையின் பின்னர் அவர், ராமேஸ்வரம் அனைத்து மகளிர் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார். [illegible] இலங்கை பெண் [illegible] செல்ல தமிழகம் வந்து சட்டவிரோதமாக தங்கி இருந்தாரா என்ற கோணத்தில் மத்திய உளவுத்துறை அதிகாரிகள் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர். தனுஷ்கோடியில் இருந்து சட்டவிரோதமாக நாட்டுப்படகில் அந்தப் பெண்ணை அழைத்துச் சென்ற முகவரை தேடி வருகின்றனர்.
கஸ்தூரியிடமிருந்து பாஸ்போர்ட் மற்றும் இலங்கை குடியுரிமை ஆவணங்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. அவர் மீது வழக்குப் பதிவுசெய்யப்பட்டுள்ளது.
விசாரணையின் பின்னர் ராமேஸ்வரம் நீதிமன்றத்தில் முற்படுத்தப்படவுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (த-56)

## மக்களுக்கு....

குற்றச்சாட்டில் மூவர் நெல்லியடி பொலிஸாரால் நேற்றுக் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.
இந்தச் சம்பவம் வதிரி, இரும்பு மதவடியில் உள்ள ஒரு வீட்டில் நேற்றுமுற்பகல் இடம்பெற்றது.
வருமானம் குறைந்த குடும்பங்களுக்கு பண உதவி வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டவுடன் நூற்றுக் கணக்கானோர் அங்கு வரிசையில் திரண்டனர். அனைவருக்கும் தலா 2 ஆயிரம் ரூபா வீதம் வழங்கப்படுவதாகக் கூறப்பட்டுள்ளது. அவ்வாறு திரண்டவர்களில் சிலர் முகக்கவசம் அணிந்திருக்கவில்லை. தனியாள் இடைவெளி பேணவில்லை. கொரோனாத் தொற்றுப் பரவுவதற்கு ஏதுவான நிலை அங்கு உருவானது. இந்தச் சம்பவம் தொடர்பில் அறிந்த நெல்லியடிப் பொலிஸார், அங்கு சென்று மக்களை விரட்டினர். பண உதவி வழங்கியவர் உட்பட மூவரைக் கைதுசெய்து அழைத்துச் சென்றனர். அவர்கள் நேற்றிரவுவரை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர். (த-26)

## 122 ரூபாவுக்கு....

எனவே, சீனியை தாராளமாகப் பெறலாம் என்று யாழ்ப்பாண மாவட்டச் செயலர் க.மகேசன் தெரிவித்தார்.
மாவட்டச் செயலகத்தில் நேற்று நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,
அத்தியாவசியப் பொருள்களான சீனி மற்றும் எரிவாயு போன்றவற்றுக்கு கடந்த காலத்தில் தட்டுப்பாடு காணப்பட்டது. எரிவாயு பிரச்சினை தீர்க்கப்பட்டுவிட்டது. சீனி விலையும் தற்போது குறைவடைந்துள்ளது.
அதேநேரம் உணவு ஆணையாளர் திணைக்களத்தினூடாக அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் இணைந்த வகையில் சீனி பகிர்ந்தளிப்புக்குரிய ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.
தற்போது அறிவிக்கப்பட்டுள்ள கட்டுப்பாட்டு விலையில் பொருள்கள் விற்பனை செய்யப்படுகின்றனவா என்பதைக் கண்காணிப்பதற்கு ஏற்பாடு மேற்கொள்ளப்படுகின்றது.
பதுக்கல் நடவடிக்கையில் ஈடுபடுவோர் மற்றும் அதிக விலைக்கு பொருள்களை விற்பனை செய்வோர் மீது பாவனையாளர் அதிகார சபையின் ஊடாக நடவடிக்கை எடுக்கப்படும்.
பொருள்கள் விநியோகத்தை தங்குதடையின்றி மேற்கொள்வதற்கு அரசு அனைத்து வசதிகளையும் ஏற்படுத்தியுள்ளது. எனவே, வியாபாரிகள் பொருள்களைப் பாதுகாத்து நியாயமான விலையில் விற்பனை செய்ய வேண்டும். - என்றார். (த-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### தலிபான்கள் கிளர்ச்சியாளர்கள்
# பஞ்ஷிர் பகுதியில் உச்சக்கட்ட மோதல்

**காபுல், செப். 7**

**ஆப்கானிஸ்தானின் பஞ்ஷிர் பள்ளத்தாக்கில் தலிபான்களுக்கும் கிளர்ச்சியாளர்களுக்கும் இடையில் உச்சக்கட்ட மோதல்கள் இடம்பெற்று வருகின்றன. சுமார் 800 தலிபான்கள் கொன்று குவிக்கப்பட்டுள்ளனர் என்று கிளர்ச்சிப் படை அறிவித்துள்ளது.**



அதேநேரம் பஞ்ஷிர் பள்ளத்தாக்கின் தலைநகர் வரை முன்னேறியுள்ளோம் என்று தலிபான்கள் அறிவித்துள்ளனர். ஆப்கானிஸ்தானில் உள்ள 34 மாகாணங்களில் 33 மாகாணங்களைத் தலிபான்கள் கைப்பற்றி விட்டனர். ஆனால் பஞ்ஷிர் மாகாணத்தில் தேசிய கிளர்ச்சிக் குழுவினர் மட்டும் தலிபான்களுக்கு அடிபணியாமல் சண்டையிட்டு வருகிறார்கள். அந்த மாகாணத்தை சுற்றி வளைத்த தலிபான்கள் தேசிய கிளர்ச்சிக் குழுவை ஒடுக்கும் முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். இருதரப்புக்கும் இடையே தற்போது கடும்மோதல் இடம்பெற்று வருகின்றது. பஞ்ஷிர் மாகாணத்தைக் கைப்பற்றிவிட்டோம் என்று நேற்று முன்தினம் தலிபான்கள் அறிவித்தனர். ஆனால், அதை எதிர்ப்புப் படையினர் திட்டவட்டமாக மறுத்தனர். இந்த நிலையில் பஞ்ஷிர் மாகாணத்தின் தலைநகருக்குள் நுழைந்துவிட்டதாக தலிபான்கள் நேற்றுத் தெரிவித்துள்ளனர். இதையும் கிளர்ச்சிப் படை மறுத்துள்ளதுடன் அங்கு தொடர்ந்து கடும் போர் இடம்பெற்று வருகின்றது என்றும் 800 தலிபான்கள் கொல்லப்பட்டுள்ளனர் என்றும் கிளர்ச்சிப்படை அறிவித்துள்ளது. (ம)

## மரண அறிவித்தல்



தோற்றம் 24 . 02 . 1937

மறைவு 05 . 09 . 2021

### அமரர் விஸ்வலிங்கம் கிருஷ்ணகுமாரி

அராலியை பிறப்பிடமாகவும் கோண்டாவிலை வசிப்பிடமாகவும் கொண்ட விஸ்வலிங்கம் கிருஷ்ணகுமாரி கடந்த (05.09.2021) அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா திரவியம் தம்பதியரின் மகளும், காலஞ்சென்ற வேலுப்பிள்ளை விஸ்வலிங்கம் அவர்களின் அன்பு மனைவியும், மகேஸ்வரி, சகுந்தலா, தவமணி, நாகம்மா, சரோஜினி மற்றும் காலஞ்சென்ற லதா ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற இராசையா, முத்துக்குமார், செல்வராசா, அப்பாத்துரை, இராஜேந்திரம் ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (08.09.2021) புதன்கிழமை காலை 6.00 மணியளவில் கோம்பயன்மணல் இந்து மயானத்தில் இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**S.காண்டீபன் - பேரன்**
**077 2487215**

# தலிபான்களுக்குள் பிளவு ஆட்சியமைப்பதில் தாமதம்

காபுல், செப். 7

ஆப்கானிஸ்தானை தலிபான்கள் கைப்பற்றியுள்ள போதிலும், அங்கு அவர்கள் ஆட்சியமைப்பதில் தொடர்ந்து இழுபறி நிலை நீடிக்கின்றது. தலிபான்களிடையே பிளவு ஏற்பட்டுள்ளது என்றும் இந்தப் பிளவுதான் இந்தப் பின்னடைவுக்குக் காரணம் என்றும் சொல்லப்படுகின்றது.

**அமெரிக்கப் படைகள் வெளியேறிய தன் பின்னர் தலிபான்கள் ஆப்கானிஸ்தானைக் கைப்பற்றி சுமார் இரண்டு வாரங்கள் ஆகிவிட்ட போதிலும் இன்னமும் அங்கு அவர்கள் ஆட்சியமைக்கவில்லை. செப்ரெம்பர் மாதம் 3ஆம் திகதி தலிபான்கள் ஆட்சியமைப்பார்கள் என்று சொல்லப்பட்டபோதிலும் இன்னும் இழுபறி நிலை நீடித்து வருகின்றது. எனவே தலிபான்கள் ஆட்சியமைப்பதில் நிலவுகின்ற இந்தப் பின்னடைவுக்கு அவர்களுக்கு இடையே ஏற்பட்டுள்ள கருத்துமோதல்தான் காரணம் என்று கருதப்படுகின்றது. (ம)**





# கென்யாவில் நேற்று இராணுவப் புரட்சி!

**கோனாக்ரி, செப். 7**

**கென்யாவில் அதிபர் ஆல்பா காண்டேவின் ஆட்சியைக் கலைத்துள்ள இராணுவம், அங்கு இராணுவ ஆட்சியை அறிவித்துள்ளது.** 2010ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் அதிபர் அல்பா காண்டே வெற்றிபெற்றார். அதன் பின்னர் 2015ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலிலும் கடந்த ஆண்டு நடைபெற்ற தேர்தலிலும் வெற்றிபெற்ற அவர் நேற்று வரை அதிபராகத் தொடந்தார். கடந்த 6 மாதங்களில் அதிபர் ஆல்பாவின் ஆட்சிக்கு எதிராகக் கடுமையான விமர்சனம் முன்வைக்கப்பட்டது. இந்த நிலையில் நேற்று அங்கு இராணுவத்தால் ஆட்சி கவிழ்க்கப்பட்டது.

கென்ய இராணுவத் தளபதி மமாடி இராணுவக் கவிழ்ப்புத் தொடர்பில் தெரிவிக்கையில், அரசாங்கத்தை ஒரு தனி நபரிடம் ஒப்படைக்க இனியும் தாங்கள் விரும்பவில்லை. அரசாங்கத்தை இனி மக்களே வழிநடத்துவார்கள். நாட்டைக் காப்பற்ற வேண்டியது ஒவ்வொரு சிப்பாயினதும் கடமை - என்றார். (ம)

# பிரிட்டன் ராணி எலிசபெத்தின் இறுதிச்சடங்கு எப்படி நடக்கும்?
## தகவல்கள் கசிந்தன

லண்டன், செப். 7

பிரிட்டன் ராணி எலிசபெத் உயிரிழந்தால், அவரின் இறுதிச் சடங்கு எவ்வாறு நடத்தப்படும் என்று திட்டமிடப்பட்டு வைக்கப்பட்டிருந்த இரகசிய ஆவணங்கள் வெளியில் கசிந்துள்ளன. இந்தத் தகவல்கள் எவ்வாறு வெளியில் விடப்பட்டன என்பது தொடர்பில் விசாரணைகள் நடத்தப்பட்டு வருகின்றன.

**'ஒபரேஷன் லண்டன் பிரிட்ஜ்' என்ற குறியீட்டுப் பெயரில் இங்கிலாந்து ராணி இறந்த பிறகு என்ன நடக்கும் என்ற விவரங்கள் அமெரிக்கச் செய்தி நிறுவனமான பொலி டிக்கோவுக்குக் கசிந்துள்ளது.** அதில் ராணி இறக்கும் நாளை அதிகாரிகள் 'டி டே' என்று குறிப்பிடுவார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் ராணி இறந்த 10 நாள்களுக்குப் பிறகு அடக்கம் செய்யப்படுவார் என்றும் இறுதிச் சடங்கு ஊர்வலம் அவரது மகனும் வாரிசானவருமான இளவரசர் சார்லஸ் தலைமையில் நடக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டு இருக்கிறது. ராணியின் உடல் வைக்கப்பட்டு இருக்கும் சவப்பெட்டி நாடாளுமன்றில் 3 நாள்கள் இருக்கும். இதனால் லட்சக்



கணக்கான மக்கள் லண்டனுக்கு வருவார்கள் என்று அதிகாரிகள் எதிர்பார்க்கிறார்கள் என்று தெரிவிக்கப்பட்டு உள்ளது. அதே போன்று ராணியின் இறுதிச்சடங்கில் பங்கேற்க லண்டனுக்கு வரும் கணிக்க முடியாத கூட்டம் மற்றும் பயணக் குழப்பங்களை நிர்வகிக்க ஒரு பாதுகாப்பு நடவடிக்கையை செயல்படுத்த திட்டமிடப்பட்டு உள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

இங்கிலாந்து ராணி இறந்த பிறகு நடக்கும் இறுதிச்சடங்கு திட்ட விவரங்கள் குறித்த ஆவணங்கள் கசிந்தமை தொடர்பாக அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகிறார்கள்.

95 வயதான ராணி, தற்போது முழு உடலாரோக்கியத்துடன் இருக்கும் நிலையில் அவரின் இறுதிச் சடங்கு தொடர்பில் தகவல்கள் கசிந்துள்ளமை பல்வேறு சர்ச்சைகளை ஏற்படுத்தியுள்ளது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 07.09.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.